Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

MONDAY, SEPTEMBER 5, 2022

திங்கட்கிழமை செப்டெம்பர் 05, 2022 | ஒளி: 08 கதிர்: 092 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

## கொத்து ரொட்டி ரூ.100ஆல் உயர்வு



கொத்து ரொட்டி ஒன்றின் விலை 100 ரூபாயாலும் பராட்டா ஒன்றின் விலை 10 முதல் 15 ரூபாயாலும் அதிகரிக்கப்பட்டுள்ளதாக சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்தது.

கோதுமை மாவின் விலை அதிகரிப்பு, கோதுமை மா தட்டுப்பாடு காரணமாக இந்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டு உள்ளதாக சங்கத்தின் தலைவர் அசேல சம்பத் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

ஐ.எம்.எப் உடன்படிக்கை

# இலங்கைக்கு உதவத் தயார்

### பரிஸ் கிளப், ஐரோப்பிய ஒன்றியம் தெரிவிப்பு



இலங்கைக்காக கடன் சலுகை திட்டமொன்றை ஆரம்பிக்கத் தயாராகி வருவதாக 'பரிஸ் கிளப்' தெரிவித்துள்ள அதேவேளை, இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க எதிர்பார்ப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை அலுவலகமும் தெரிவித்துள்ளது.
கடனாளி நாடுகள் அனுபவிக்கும் கொடுப்பனவு சிரமங்களுக்கு, ஒருங்கிணைந்த மற்றும் நிலையான தீர்வுகளைக் கண்டறிவதில் முக்கிய பங்கு வகிக்கும் பெரிய கடன் வழங்கும் நாடுகளின் அதிகாரிகள் குழுவான 'பரிஸ் கிளப்', இலங்கைக்காக கடன் சலுகை திட்டமொன்றை ஆரம்பிக்க தயாராகி வருவதாக அறிக்கை மூலம் அறிவித்துள்ளது. இலங்கைக்கான நிதி பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, 'பரிஸ் கிளப்' அங்கத்தவர் அல்லாத இருதரப்பு கடன் வழங்குநர்களை 'பரிஸ் கிளப்' ஒருங்கிணைக்கும் என்றும்

தொடர்ச்சி P2

புதிய கட்சி அலுவலகத்தை

## சந்திரிகா குமாரதுங்க இன்று திறந்து வைப்பார்



பாராளுமன்ற உறுப்பினர் குமார வெல்கம தலைமையிலான நவ லங்கா சுதந்திரக் கட்சியின் கட்சி அலுவலகம் இன்று (05) திங்கட்கிழமை திறந்து வைக்கப்படவுள்ளது.

இந்தப் புதிய கட்சி அலுவலகத்தை முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க திறந்து வைக்கவுள்ளார்.

தொடர்ச்சி P2

## கோதுமை இறக்குமதிக்கு துருக்கி, டுபாயுடன் பேச்சு



கோதுமை மாவை இறக்குமதி செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் துருக்கி, டுபாய் ஆகிய நாடுகளுடன் ஆரம்பிக்கப்பட்டு உள்ளன என வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர் நளின் பெர்னான்டோ தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

இலங்கையையும் இந்தியாவையும்

# எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாது

இலங்கையையும் இந்தியாவையும் எந்தப் பிரிவினைவாத சக்தியாலும் பிரிக்க முடியாது என்று தெரிவித்த வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, இரு நாடுகளுக்கும் இடையிலான பிணைப்பு, பல நூற்றாண்டுகளாகத் தொடர்வதாகவும் அது மேலும் வலுவாகத் தொடரும் என்றும் தெரிவித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய போதே, மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் தெரிவித்தார்.

இக்கட்டான நிலைமையில், ஏனையோர் கோரிக்கைகளை முன்வைத்த போது, இந்தியா இலங்கைக்கு தனது ஆதரவை வழங்கியது. இந்தியாவின் ஆதரவின்றி, இலங்கை மக்கள் போராடி உயிர் பிழைத்திருக்க மாட்டார்கள் என்றும் சுட்டிக்காட்டினார்.

தொடர்ச்சி P2



**“இக்கட்டான நிலைமையில், ஏனையோர் கோரிக்கைகளை முன்வைத்த போது, இந்தியா இலங்கைக்கு தனது ஆதரவை வழங்கியது. இந்தியாவின் ஆதரவின்றி, இலங்கை மக்கள் போராடி உயிர் பிழைத்திருக்க மாட்டார்கள்**

## சுகாதாரத் துறைக்கு உடனடி கொள்கை மாற்றம் அவசியம்

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



சுகாதாரத் துறையில் உடனடி கொள்கை மாற்றம் அவசியம் என்று, அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கத்துடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## முச்சதம் அடித்தது ஓர் இறாத்தல் பாண்

ஒரு இறாத்தல் (450 கிராம்) பாணின் விலையை 300 ரூபாய்க்கு விற்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளதாக அகில இலங்கை பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் என்.கே.ஜயவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## வங்குரோத்து நிலையில் இருந்து மீளவேண்டும்



“அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் சமூகத்தில் மாற்றத்தைக் கோரினார்கள். காரணம் எதிர்காலம் அவர்களுக்கே சொந்தமானது. எதிர்காலம் எங்களுக்கானதல்ல. அப்படியாயின், அவர்களின் கருத்துகளுக்கு செவிசாய்த்து நாம் முன்நோக்கிப் பயணிக்க வேண்டும்.

தொடர்ச்சி P2

## மின்சார சபை மறுசீரமைப்பு

### மாத இறுதிக்குள் அமைச்சரவைக்கு என்கிறார் காஞ்சன



இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதற்கான முன்மொழிவு இம்மாத இறுதிக்குள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என வலுச்சக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர, நேற்று (04) தெரிவித்தார்.

தொடர்ச்சி P2




## 100 நாள் செயல்முனைவில் வில்லிசைத்து கவனயீர்ப்பு

சுப்பிரமணியம் பாஸ்கரன்

'வடக்கு, கிழக்கு மக்களுக்கான கௌரவமான உரிமைகளுடன் கூடிய அரசியல் தீர்வு' எனும் தொனிப்பொருளில் கவனயீர்ப்பு போராட்டம், முழங்காவில் பிள்ளையார் கோவில் பகுதியில் முன்னெடுக்கப்பட்டது.

100 நாள் செயல்முனைவின் 34 ஆம் நாளான நேற்று (04), இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பொதுமக்கள், கிராம அமைப்புகள், மீனவ சங்கங்கள், சிவில் அமைப்புகள் ஒன்றுகூடி நேற்றுக் காலை 9 மணி ஆரம்பிக்கப்பட்ட உரிமைக்கான கவனயீர்ப்பு போராட்டம் நண்பகல் 12 வரை நடைபெற்றது.

அதில் பங்கேற்றிருந்தவர்கள், மேற்படி விடயத்தை வலியுறுத்தி வில்லிசையும் இசைத்தமை குறிப்பிடத்தக்கது.

## எரிவாயு விலை நள்ளிரவு குறையும்




உலக சந்தையில் நிலவும் எரிவாயு விலையை கருத்திற்கொண்டு, விலைச் சூத்திரத்துக்கு அமைய, இன்று (05) நள்ளிரவு முதல் லிட்ரோ எரிவாயுவின் விலை குறைக்கப்படும் என்று நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## எரிவாயு முற்பதிவுக்கு செயலி அறிமுகம்

### டொலரில் எரிவாயு வாங்கலாம்



வெளிநாட்டில் உள்ள இலங்கையர்கள் இலங்கையில் உள்ள தங்களது உறவினர்களுக்கு எரிவாயு சிலிண்டர்களை முற்பதிவு செய்வதற்கு வசதியாக, எரிவாயு சிலிண்டர்களை முற்பதிவு செய்வதற்கான செயலியை லிட்ரோ எரிவாயு நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. வெளிநாட்டிலுள்ள இலங்கையர்கள் தமது உறவினர்களுக்கான எரிவாயு சிலிண்டர்களை

தொடர்ச்சி P2

## இளைஞரின் உயிரை குடித்த செல்ஃபி

பண்டாரவளை, ஹல்துமுல்ல லைபான் பிரிவு சன்வெளி தோட்டத்திலுள்ள நீர்வீழ்ச்சிக்கு அருகில் செல்ஃபி எடுக்க முயன்ற இளைஞர் ஒருவர் தவறி வீழ்ந்து உயிரிழந்துள்ளார் என்று ஹல்துமுல்ல பொலிஸார் தெரிவித்தனர்.

வெலிமடை குருதலாவ பிரதேசத்தைச் சேர்ந்த மதுசங்க சாகர என்ற 24 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

நீர்வீழ்ச்சியை பார்வையிடுவதற்காக மூன்று நண்பர்களுடன் சனிக்கிழமை (02) மாலை குறித்த இடத்துக்கு அவர் சென்றுள்ளார்.

தொடர்ச்சி P2

## 2.9 மில். டொலர் உடன்படிக்கை

### ஐ.எம்.எப் தலைவர் மகிழ்ச்சி



நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளுக்கு ஆதரவளிப்பதற்காக சர்வதேச நாணய நிதியத்தின் பணியாளர்களுக்கும் இலங்கை அதிகாரிகளும் இடையேயான பணியாளர் மட்ட உடன்பாட்டை எட்டியமை குறித்து மகிழ்ச்சியடைவதாக,

தொடர்ச்சி P2

76ஆவது தேசிய மாநாடுடன் மீண்டும்

# பலம்வாய்ந்த கட்சியாக ஐ.தே.க உருவெடுக்கும்

ஐக்கிய தேசிய கட்சியின் 76ஆவது தேசிய மாநாடுடன் கட்சி மீண்டும் பலப்படுத்தப்படும் என்பதுடன், மக்கள் எதிர்கொண்டுள்ள அனைத்துவிதமான பொருளாதார பிரச்சினைகளுக்குத் தீர்வை பெற்றுக்கொடுக்க அர்ப்பணிப்புடன் செயற்படும் என்று ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் எஸ். ஆனந்தகுமார் தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டின் பொருளாதாரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் மாத்திரமே கட்டியெழுப்ப முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருந்ததாவது: கட்சியின் 76ஆவது தேசிய மாநாடு, செப்டெம்பர் ஆறாம் திகதி கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில், கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் பிரமாண்டமாக நடைபெறவுள்ளது.

இலங்கையின் பழைமையான கட்சியும் நாட்டுக்கு சுதந்திரத்தை பெற்றுக்கொடுப்பதில் முன்னணி கட்சியாகவும் செயற்பட்ட பாரம்பரியம்மிக்க இந்தக் கட்சியின் சமகால தலைவர் ரணில் விக்கிரமசிங்க, நாட்டின் ஜனாதிபதியாக சிறந்த நிர்வாகத்தை முன்னெடுத்துவருவதுடன் பொருளாதாரத்தை கட்டியெழுப்ப தொலைநோக்கு பார்வையுடன் செயற்பட்டு வருகிறார்.

கடுமையான பொருளாதார நெருக்கடியில் தத்தளித்துவந்த இலங்கைக்கு மீண்டும் சுவாசிக்கும் சக்தியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கதான் கொடுத்துள்ளார் எனவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

தொடர்ச்சி P2



## ஐ.தே.கவினர் சிறப்பு வழிபாடு

ஐக்கிய தேசிய கட்சியின் 76ஆவது தேசிய மாநாடு, கொழும்பு சுகததாச உள்ளக விளையாட்டரங்கில் நாளை (06) நடைபெறவுள்ளது.

தொடர்ச்சி P2



PAGE1 தொடர்ச்சிகள்

# இலங்கைக்கு உதவத் தயார்

அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இலங்கைக்கும் சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகளுக்கும் இடையில் எட்டப்பட்டுள்ள 48 மாத காலத்துக்கான நீடித்த நிதி வசதி குறித்த பணியாளர் மட்ட உடன்படிக்கையை 'பரிஸ் கிளப்' குழு வரவேற்றுள்ளது.

இதேவேளை, சர்வதேச நாணய நிதியத்துக்கும் இலங்கைக்கும் இடையே எட்டபட்டுள்ள பணியாளர் மட்ட உடன்பாட்டை ஏற்படுத்திக் கொண்டமைக்கு ஐரோப்பிய ஒன்றியம் வாழ்த்து தெரிவித்துள்ளது.

தமது ஒன்றியம் தொடர்ச்சியாக இலங்கைக்கு ஒத்துழைப்பு வழங்க எதிர்பார்ப்பதாக ஐரோப்பிய ஒன்றியத்தின் இலங்கை அலுவலகம் வெளியிட்டுள்ள 'டுவிட்டர்' செய்தியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

ஏற்றுமதி முறைமை, அரச நிதி முகாமைத்துவம், பசுமை உற்பத்திகளை பெற்றுகொடுக்கவும் எதிர்பார்ப்பதாக ஐரோப்பிய ஒன்றியம் மேலும் தெரிவித்துள்ளது.

# கோதுமை இறக்குமதிக்கு துருக்கி, டுபாயுடன் பேச்சு

உள்நாட்டில் கோதுமை மாவுக்கு ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டால் சதோச உள்ளிட்ட நிறுவனங்களில் கோதுமை மாவின் விலை அதிகரித்துள்ளது. ஒரு கிலோ கிராம் கோதுமை மா மொத்த விற்பனைக்கு 350 - 400 ரூபாய்க்கும் சில்லறை விற்பனைக்கு 360 - 380 ரூபாய்க்கும் விற்பனை செய்யப்படுகிறது. குறிப்பாக, ரஷ்யா - உக்ரேன் யுத்தத்தால் தற்போது பல உணவுப் பொருட்களின் ஏற்றுமதியை இந்தியா நிறுத்தியுள்ளது. இதன் விளைவாக, கோதுமை மாவின் இறக்குமதியை தடை செய்துள்ளதோடு, அதன் ஏற்றுமதியையும் கட்டுப்படுத்தியுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

உள்நாட்டின் கோதுமை மா தயாரிப்பு நிறுவனங்களான பிரிமா, செரண்டிப் ஆகிய இரு நிறுவனங்களின் சேமிப்பில் உள்ள மாவை மொத்த விற்பனை சந்தைகளுக்கு வாராந்தம் விநியோகிக்க தனது அமைச்சுடன் ஒப்பந்தம் செய்துள்ளதாகவும் நளின் பெர்ணான்டோ தெரிவித்தார்.

இதேவேளை, மேற்குறித்த நிறுவனங்களால் விநியோகிக்கப்படும் கோதுமை மாவின் அளவு தொடர்பில் கண்காணித்து அறிக்கை ஒன்றை தனக்கு வழங்க வேண்டும் என நுகர்வோர் அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் தெரிவித்தார்.

# முச்சதம் அடித்தது ஒரு இறாத்தல் பாண்

கோதுமை மா தட்டுப்பாடு மற்றும் கறுப்பு சந்தை உருவாக்கம் காரணமாக, விலை அதிகரித்து வருவதாகவும் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவின் மொத்த விலை 350 ரூபாய் முதல் 400 ரூபாயாக காணப்படுவதாகவும் சுட்டிக்காட்டினார்.

சந்தையில், 3,500 ரூபாயாக காணப்பட்ட 50 கிலோ கிராம் கோதுமை மா மூடை ஒன்றின் விலை தற்போது 25,000 ரூபாய்க்கு விற்கப்படுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மாவின் விலை அதிகரித்த போதிலும் ஓர் இறாத்தல் பாணின் விலையை 300 ரூபாயாக அதிகரிப்பதற்கு தீர்மானிக்கவில்லை என்று குறிப்பிட்டார்.

எனினும், விற்கும் பேக்கரி உரிமையாளர்கள் ஒரு இறாத்தல் பாணை 300 ரூபாய்க்கு விற்பனை செய்தால் அதனை சங்கம் எதிர்க்காது என்றும் குறிப்பிட்டார்.

# மின்சார சபை மறுசீரமைப்பு

இலங்கை மின்சார சபையை மறுசீரமைப்பதற்காக நிதியமைச்சின் முன்னாள் செயலாளர் ஆர்.எச். எஸ் சமரதுங்க உட்பட எழுவர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் முன்னர் தெரிவித்திருந்தார். அதற்கமைய மின்சார சபையின் சீர்திருத்தக் குழுவின் முன்மொழிவுகள் தொடர்பில் நேற்று (04) காலை கலந்துரையாடியதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தக் குழு, அபிவிருத்தி முகவர்கள், துறைசார் நிபுணர்கள், பங்குதாரர்களை சந்தித்துள்ளதுடன், அரசியல் கட்சிகள் மற்றும் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு ஆகியவற்றை அடுத்த வாரம் சந்திக்கவுள்ளது.

# பலம்வாய்ந்த கட்சியாக ஐ.தே.க உருவெடுக்கும்

நாட்டில் சீர்குலைந்திருந்த சட்டவாட்சியை மீண்டும் வலுப்படுத்தி, சகல தரப்பினரையும் இணைத்து சர்வகட்சி அரசாங்கமொன்றை அமைப்பதற்கான செயற்பாடுகளிலும் ஜனாதிபதி ஈடுபட்டுள்ளார் என்றார்.

76ஆவது ஆண்டு விழாவை கொண்டாடும் ஐ.தே.க, இந்த நாட்டின் வளர்ச்சியிலும் சிறந்த பொருளாதார கொள்கைகளை அறிமுகப்படுத்தியதிலும் முதன்மை கட்சியாகும்

கடந்த நல்லாட்சி காலத்தில், நாட்டு மக்களின் வாழ்க்கைச் செலவு மிகவும் குறைந்த அளவிலேயே இருந்தது. முறையற்ற நிர்வாகத்தின் காரணமாக, நாட்டின் பொருளாதாரம் அதலபாதாளத்தில் தள்ளப்பட்டது.

பொருளாதாரத்தை மீண்டும் ஐ.தே.கவால் மாத்திரமே ஸ்திரப்படுத்த முடியும் என்பதை ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு தமது இடைகால பட்ஜெட் மற்றும் உறுதியான தீர்மானங்கள் மூலம் உணர்த்தியுள்ளார் என்று அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# எந்தச் சக்தியாலும் பிரிக்க முடியாது

கட்டமைப்புகள் மற்றும் பொறிமுறைகளில் இந்தியாவின் ஆதரவு நிலைத்திருப்பதால், நெருக்கடியை சமாளிக்க இலங்கையால் போராட முடியும் என்றார்.

இருநாடுகளுக்கும் இடையில் அவ்வப்போது கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இது குடும்ப உறுப்பினர்களிடையே கூட பொதுவானது. இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையில் எவராலும் வர முடியாது என்றும் குறிப்பிட்டார்.

எந்த நாடும் தனியாக முன்னேறவில்லை. பிராந்தியங்களாக முன்னேறுவதாகவும் சுட்டிக்காட்டிய அவர், வட அமெரிக்கா, மத்திய கிழக்கு, ஐரோப்பா, ஆசிய பிராந்தியங்களின் வளர்ச்சின் மூலம் தெளிவாகத் தெரிவதாகவும் குறிப்பிட்டார். ஆகையால், இந்தியாவின் முன்னேற்றம் மற்றும் செழிப்பு இலங்கைக்கும் பிராந்தியத்திற்கும் நன்மை பயக்கும் என்று அமைச்சர் சப்ரி மேலும் தெரிவித்தார்.

# சந்திரிகா குமாரதுங்க இன்று திறந்து வைப்பார்

புதிய கட்சி அலுவலகம் பத்தரமுல்லையில் அமைக்கப்படும் எனத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் வெல்கம, 40 வயதுக்குட்பட்ட இளைஞர்களுக்கு பயிற்சியளிக்கப்பட்டு, எதிர்காலத்தில் ஊழலற்ற இளைஞர் அரசியல் இயக்கமாக உருவாக்கப்படும் என்றார்.

# சுகாதாரத் துறைக்கு உடனடி கொள்கை மாற்றம் அவசியம்

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்து தட்டுப்பாடு குறித்து ஆராய்வதற்காக சங்கத்தால் நியமிக்கப்பட்ட மூவரடங்கிய குழுவின் அறிக்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஜனாதிபதி செயலகத்தில் வைத்து சனிக்கிழமை (03) கையளிக்கப்பட்டது.

மருந்துத் தட்டுப்பாடு மற்றும் மருந்துப் பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக, மக்கள் எதிர்நோக்கும் இன்னல்களைப் போக்குவதற்கான உடனடி முறைமை அவசியம் என்று ஜனாதிபதி வலியுறுத்தினார்.

மருந்துகள் உட்பட சுகாதாரத் துறையின் ஏனைய தேவைகள் தொடர்பில், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியத்துடன் கலந்துரையாட உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பு தேசிய வைத்தியசாலை, களுபோவில போதனா வைத்தியசாலை, ஜயவர்தனபுர வைத்தியசாலை ஆகியவற்றுக்கு மேலதிக வசதிகளை ஏற்படுத்தி, அவற்றை அபிவிருத்தி செய்வது அவசியம் என்றும் முழு சுகாதார துறைக்கும் கொள்கை மாற்றம் அவசியம் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

புற்றுநோயாளிகளுக்கான மருந்துகள், இன்சுலின் தட்டுப்பாடு பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வுகாண நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் சங்கப் பிரதிநிதிகள் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்தனர்.

# ஐ.தே.க.வினர் சிறப்பு வழிபாடு

இதனை முன்னிட்டு கொழும்பில் உள்ள பல்வேறு மதஸ்தலங்களில் வழிபாடுகள் நேற்று (04) இடம்பெற்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் இல்லத்துக்கு அருகில் அமைந்துள்ள அம்மன் கோவிலில் இடம்பெற்ற வழிபாடுகளின் பின்னர், கொச்சிக்கடை ஸ்ரீ பொன்னம்பலவாணேசுவரர் கோவிலிலும் வழிபாடுகள் இடம்பெற்றன.

இதில், ஐ.தே.கவின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான சுவாமிநாதன், யோகராஜன், முன்னாள் ஆளுநர் சாந்தனி கோங்காகே, ஐக்கிய தேசிய கட்சியின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் சுப்பையா ஆனந்தகுமார் ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.

அத்துடன், கொச்சிக்கடை புனித அந்தோனியார் திருத்தலம், கொழும்பு நகர சபைக்கு அண்மையிலுள்ள பள்ளிவாசலிலும், கொழும்பு-02 கங்காராமை விஹாரையிலும் விசேட வழிபாடுகள் இடம்பெற்றன.

# கொத்து ரொட்டி ரூ.100ஆல் உயர்வு

இதுவொரு பாரதூரமான பிரச்சினை என்று தெரிவித்த அவர், எரிவாயு போன்ற அத்தியாவசிய பொருட்களின் விலையை குறைப்பதுடன், இந்தப் பொருட்களுக்கு அதிகபட்ச சில்லறை விலையை நிர்ணயிக்க வேண்டும் என்றார்.

பல்வேறு இடங்களில் விலையில் வேறுபாடு காணப்படுவதாக கூறிய அவர், உணவுப் பொருட்கள் மற்றும் பிற பொருட்களை நகர்ப்புறங்களில் விற்கும் விலைக்கே கிராமப்புறங்களிலும் விற்பனை செய்ய வேண்டும் என்று அதிகாரிகளுக்கு வேண்டுகோள் விடுத்தார்.

# எரிவாயு விலை நள்ளிரவு குறையும்

ஒகஸ்ட் 9ஆம் திகதி 12.5 கிலோ கிராம் நிறையுடைய லிட்ரோ சமையல் எரிவாயு சிலிண்டரின் விலை 246 ரூபாயால் குறைக்கப்பட்டிருந்தது. இந்நிலையில், 12.5 கிலோ கிராம் சமையல் எரிவாயு விலை 100 முதல் 200 ரூபாய்க்கு இடைப்பட்டதொரு தொகையால் குறைக்கப்படலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஒகஸ்ட் மாத விலை குறைப்புக்குப் பின்னர் 12.5 கிலோ கிராம்எரிவாயு சிலிண்டர் 4,664 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது. 5 கிலோ கிராம் நிறையுடைய சிலிண்டரின் விலை 99 ரூபாயாலும், 2.3 கிலோ கிராம் நிறையுடைய சிலிண்டரின் விலை 45 ரூபாயாலும் குறைக்கப்பட்டிருந்தன.

# எரிவாயு முற்பதிவுக்கு செயலி அறிமுகம்

அருகிலுள்ள விற்பனை முகவர்களிடம் முற்பதிவு செய்ய முடியும் என நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் குறிப்பிட்டார்.

டொலரைப் பயன்படுத்தி செயலி மூலம் சிலிண்டர்களை கொள்வனவு செய்யலாம் என்றும், நாட்டில் நிலவும் அந்நியச் செலாவணி நெருக்கடியைத் தணிக்கும் நடவடிக்கையாக இந்தச் செயலி அறிமுகப்படுத்தப்படும் என்றும் தெரிவித்தார்.

# இளைஞரின் உயிரை குடித்த செல்:.பி

அங்கிருந்து செல்ஃபி எடுப்பதற்கு முயன்ற போது, கால் வழுக்கி நீர்வீழ்ச்சியில் விழுந்துள்ளார். இதனையடுத்து, பிரதேச மக்களும் பொலிஸாரும் மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கையில், சம்பவ இடத்திலிருந்து சுமார் 200 மீற்றர் பள்ளத்திலிருந்து இளைஞரின் சடலம் மீட்கப்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# 2.9 மில். டொலர் உடன்படிக்கை

நிதியத்தின் தலைவர் கிறிஸ்டலினா ஜோர்ஜீவா, நேற்று (04) தெரிவித்துள்ளார். அவருடைய உத்தியோகபூர்வ 'டுவிட்டர்' பக்கத்தில் வெளியிட்ட பதிவிலேயே மேற்குறிப்பிட்ட விடயத்தை அவர் சுட்டிக்காட்டியுள்ளனார். இலங்கை அரசாங்கமும் சர்வதேச நாணய நிதியமும் 2.9 பில்லியன் அமெரிக்க டொலரை 48 மாத விரிவாக்கப்பட்ட நிதி உதவிக்கான உடன்படிக்கையை எட்டியுள்ளதாக கடந்த வியாழன்று (01) மத்திய வங்கியில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் ஐ.எம்.எப் அதிகாரிகள் அறிவித்திருந்தனர்.

அது தொடர்பிலேயே கருத்து வெளியிட்ட சர்வதேச நாணய நிதியத்தின் தலைவர், இது இலங்கைக்கு ஒரு முக்கியமான முன்னேற்றம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# வங்குரோத்து நிலையில் இருந்து மீளவேண்டும்

இந்த வங்குரோத்து நிலையில் இருந்து மீள வேண்டும்" என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

"இவற்றை செய்ய பாராளுமன்றம் வேண்டும்; ஜனநாயகம் வேண்டும்; சட்டத்தின் ஆட்சி வேண்டும். எனவே, இவ்வாறு செயற்பட, இவற்றைப் பாதுகாக்க இந்த இரண்டு தரப்பினரும் நடவடிக்கை எடுத்தனர்" என்றும் குறிப்பிட்டார்.

156ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு பொலிஸ் மேலதிக படைத் தலைமையகத்தில் நேற்று (03) பிற்பகல் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றியபோதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில், பொலிஸ் மற்றும் சுயாதீன நீதிமன்றம் இன்றி சட்டத்தின் ஆட்சியைப் பாதுகாக்க முடியாது. இந்த இரண்டு நிறுவனங்களைப் பாதுகாப்பதன் மூலம் மட்டுமே, தொடர்ந்தும் முன்நோக்கிப் பயணிக்க முடியும்.

நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமாயின், ஜனநாயகமும் சட்டத்தின் ஆட்சியும் உறுதிசெய்யப்படுதல் அவசியம்.

ஜனநாயகத்தைப் பாதுகாக்க வேண்டுமாயின், அரசியலமைப்பைப் பாதுகாக்க வேண்டும்.

அன்று போராட்டக்காரர்கள் பாராளுமன்றத்தைக் கைப்பற்றியிருந்தால் நாட்டின் ஜனநாயகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கும். அத்துடன், சட்டத்தின் ஆட்சி மீறப்பட்டிருக்கும்.

"பாராளுமன்றத்தை முற்றுகையிட்டிருந்தால், இன்று இந்த ஜனநாயகம் இருந்திருக்காது. நாட்டை யார் ஆட்சி செய்வது என்று எங்களுக்கு தெரிந்திருக்காது. என்ன நடக்கும் என்று எங்களுக்கு தெரியாமல் இருந்திருக்கும். இவ்வாறானதொரு நெருக்கடியையே நாம் எதிர்கொண்டோம்.

பாராளுமன்றத்தைக் கைப்பற்றியிருந்தால் இந்த நாட்டில் ஜனநாயகத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டிருக்கும்.

யாராலும் பணியாற்ற முடியாமல் போயிருக்கும். அப்படியென்றால், அது சட்டத்தின் ஆட்சியை மீறும் செயலாகும். சட்டத்தின் ஆட்சியை மீறுவது மட்டுமன்றி, அது அரசியலமைப்பையும் மீறும் செயலாகும். இது மக்களின் சர்வஜன வாக்குரிமையை இல்லாது செய்யும் செயற்பாடாகும்.

அந்தச் சந்தர்ப்பத்தில், இராணுவமும் பொலிஸாரும் செயற்பட்டதால் பாராளுமன்றம் பாதுகாக்கப்பட்டது.

இது ஜனநாயகத்துக்கு விரோதமானது எனச் சிலர் கூறுகின்றனர்.

வந்தவர்களை சரியாக கையாளவில்லை; அவர்களை ஒடுக்கியதாக சிலர் கூறுகின்றனர்.

வேறு என்ன செய்வது?

வந்தவர்களுக்கு பாராளுமன்ற சிற்றூண்டிச் சாலையில் தேநீர் வழங்குவதா? இதைத் தடுக்கவில்லை என்றால் என்ன நடந்திருக்கும். சட்டம், ஒழுங்கு, அமைதி இருந்திருக்குமா?" என்றும் ஜனாதிபதி கேள்வியெழுப்பினார்.

இச்சந்தர்ப்பத்தில் சட்டத்தின் ஆட்சியையும் அரசியலமைப்பையும் பொலிஸாரே பாதுகாத்ததாக சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அனைத்து பொலிஸாருக்கும் இதற்கான கௌரவத்தை வழங்குவதாகவும் தெரிவித்தார்.

ஊடகங்கள் என்னதான் பொலிஸாரை குற்றஞ்சாட்டினாலும் தமது புகைப் படப்பிடிப்பாளர்களைத் தாக்கியதாக் கூறினாலும் இரு தரப்பினருக்கும் இடையில் சிறந்ததோர் உறவு இருப்பதை இந்த நிகழ்வில் காண முடிந்ததாகவும் ஜனாதிபதி குறிப்பிட்டார்.

இந்நாட்டில் மார்ச் மாதம் இளைஞர்கள் ஒன்று சேர்ந்து அரசாங்கத்துக்கு எதிராக அமைதியான போராட்டமொன்றை ஆரம்பித்ததார்கள். ஜூன் மாதமளவில் வன்முறையாளர்கள் இவர்களை வெளியேற்றிவிட்டு, தாம் போராட்டத்தை கைப்பற்றியதாகவும் குறிப்பிட்டார்.

ஜூன் மாதம் அந்தப் போராட்டம் நலிவடைய இருந்ததாகவும் அந்த நேரத்தில் போராட்டத்தை ஆரம்பித்த இளைஞர்களுக்குப் பதிலாக இலங்கையின் பல பகுதிகளில் இருந்தும் குழுக்களைக் கொண்டுவந்து, அரசாங்கத்தை முடக்கும் வகையில் செயற்பட்டனர்.

ஜனாதிபதி மாளிகை, ஜனாதிபதி செயலகம் ஆகியவற்றை கைப்பற்றியதால் ஜனாதிபதியால் செயற்பட முடியாது போனது.

அதன்பின்னர், பிரதமரின் உத்தியோகபூர்வ இல்லத்தைக் கைப்பற்றி, எனது இல்லத்துக்கும் தீயிட்டனர்.

இதற்கிடையில் பிரதமர் அலுவலகத்தைக் கைப்பற்றியதுடன் அதிகாரம் முடங்கிப் போயிருந்த அன்று பாதுகாப்பு அமைச்சில் இருந்து தான் பணியாற்றியதாகவும் குறிப்பிட்டார்.

"அமைதியான ஆர்ப்பாட்டக்காரர்கள் சமூகத்தில் மாற்றத்தைக் கோரினார்கள். காரணம் எதிர்காலம் அவர்களுக்கே சொந்தமானது; எதிர்காலம் எங்களுக்கானதல்ல. அப்படியாயின், அவர்களின் கருத்துகளுக்கு செவிசாய்த்து, நாம் முன்நோக்கிப் பயணிக்க வேண்டும். இந்த வங்குரோத்து நிலையில் இருந்து மீள வேண்டும்.

இவற்றை செய்ய பாராளுமன்றம் வேண்டும்; ஜனநாயகம் வேண்டும்; சட்டத்தின் ஆட்சி வேண்டும். எனவே, இவ்வாறு செயற்பட, இவற்றைப் பாதுகாக்க இந்த இரண்டு தரப்பினரும் நடவடிக்கை எடுத்தனர்.

இந்த அதிகாரிகளின் அர்ப்பணிப்பு காரணமாக, ஜனநாயகம் பாதுகாக்கப்பட்டது.

அரசியல்வாதிகள் என்ற ரீதியில் நாமும் தவறிழைத்துள்ளோம். இவற்றைத் திருத்திக்கொண்டு, அனைவரும் இணைந்து புதிய பயணத்தை, 75ஆவது சுதந்திர தினத்தில் இருந்து ஆரம்பிப்போம்" என்றார்.

# விரட்டப்பட்ட தலைவர் மீண்டும் வந்துவிட்டார்



இருநூற்றி இருபது இலட்சம் மக்கள் பாரிய துன்பங்களை அனுபவிக்கும் வேளையில், அரசாங்கம் அமைச்சுப் பதவிகளை பகிர்ந்து கொள்வதற்கு முண்டியடித்துக் கொண்டிருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் காலி மாவட்ட பலப்பிட்டிய தேர்தல் தொகுதி கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, எதிர்க்கட்சி தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். எதிர்காலத்தில் மின்வெட்டு ஏற்படும் போது, இந்நாட்டு மக்கள் நடுங்கத் தொடங்குவார்கள். மக்கள் ஏற்கெனவே வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால் மிகவும் அவதிப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். அவர் மேலும் அங்கு கூறியதாவது:

நாட்டில் இடம்பெற்று வரும் நடவடிக்கைகளை நோக்கும் போது, சந்தர்ப்பவாத அரசியல்தான் நடைபெறுகின்றது என்பது மிகவும் தெளிவாகத் தெரிகின்றது. இத்தகைய சூழ்ச்சிகளில், ஐக்கிய மக்கள் சக்தியோ ஐக்கிய மக்கள் கூட்டணியோ ஒருபோதும் தொடர்பு கொள்ளாது.

விரட்டப்பட்ட முன்னாள் ஜனாதிபதி, மீண்டும் நாடு திரும்பியுள்ளார். அது அவ்வாறு நடக்கும் போது, போராட்டத்தில் ஈடுபட்ட இளைஞர்கள் மீது, அரசாங்கம் தனது வன்முறையை பிரயோகித்து, அவர்கள் மீது அடக்குமுறைகளை மேற்கொண்டு வருகிறது.

முன்னாள் ஜனாதிபதியின் வருகைக்கு பின்னால், ராஜபக்ஷர்களின் நிழலே முன்னின்று செயற்பட்டது. அது யாருமல்ல; தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்வே ஆவார் என்றும் சஜித் பிரேமதாஸ குற்றச்சாட்டினார்.

## சீன நிறுவனத்துக்கு சிக்கல் வரும் ஆபத்து




இறக்குமதி செய்யப்படாத சீனாவின் உரக் கப்பலுக்கு 6.9 மில்லியன் டொலர் செலுத்திய அதிகாரிகளுக்கு எதிராக, சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமென பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய பக்றீரியாக்களைக் கொண்ட உரத்தை, நாட்டில் இறக்குமதி செய்ய முயற்சித்த சீன நிறுவனத்திடமிருந்து நட்ட ஈட்டைப் பெற வேண்டும் எனவும், இந்த உர விவகாரம் தொடர்பில் கணக்காய்வை மேற்கொண்ட விசேட கணக்காய்வு அறிக்கையில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

சீனாவிலிருந்து கொள்முதல் செய்ய திட்டமிடப்பட்ட 96 மெட்ரிக் தொன் இயற்கை உர விவகாரம் தொடர்பில், தேசிய கணக்காய்வு அலுவலகம் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது. இந்த அறிக்கையில் இலங்கை சட்டத்திட்டங்களை மீறிய குறித்த சீன உர நிறுவனத்தைக் கறுப்புப் பட்டியலில் சேர்க்குமாறும் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மாங்குளம் வீதியில்

## 20 கிலோ கிராம் கஞ்சா மீட்பு

■ சண்முகம் தவசீலன்

முல்லைத்தீவு - மாங்குளம் விதியில் ஒட்டுசுட்டான் பகுதியில் கடத்தலுக்குத் தயாராக இருந்த 20 கிலோ கிராம் கஞ்சா மீட்கப்பட்டுள்ளது.

மாங்குளம் வீதியின் 19ஆம் கட்டைப் பகுதியில் கஞ்சா கடத்தப்பட இருப்பதாக இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து, நேற்று முன்தினம் (03) சம்பவ இடத்துக்குச் சென்ற இராணுவத்தினர், கடத்தல்காரர்கள் தப்பியோடிய நிலையில், கடத்தலுக்கு தயாராக இருந்த கஞ்சா பொதிகளை மீட்டுள்ளார்கள்.

கடத்தலுக்காக பொதி செய்யப்பட்ட நிலையில் உரப்பையில் கட்டப்பட்ட சுமார் 20 கிலோ கிராம் கஞ்சா, இதன்போது மீட்கப்பட்டுள்ளது.

இராணுவத்தினரின் தகவலை தொடர்ந்து விரைந்த ஒட்டுசுட்டான் பொலிஸார், கஞ்சா பொதிகளை மீட்டுள்ளதுடன், சந்தேகநபர்கள் தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன், கஞ்சாவை நீதிமன்றில் பாரப்படுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள்.

ஒட்டுசுட்டான்-மாங்குளம் வீதியில் 19ஆம் கட்டைப்பகுதியில் நீண்ட காலமாக கஞ்சா பொதிகள் பரிமாறப்பட்டு வருவதாக தெரியவந்துள்ளது.





## 400 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்படும் அபாயம்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள புதிய கட்டண முறைமையால் 400 இக்கும் அதிகமான எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூடப்பட வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதாக, எரிபொருள் நிரப்பு நிலையங்களின் உரிமையாளர் சங்கத்தின் தலைவர் குமார் ராஜபக்ஷ தெரிவித்தார்.



எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு முன்கூட்டியே கட்டணத்தை செலுத்த வேண்டும் என்கிற புதிய கட்டண முறைமையை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அறிமுகப்படுத்தியுள்ளது.

700 இக்கும் அதிகமான எரிபொருள் நிரப்பு நிலையங்களை, வெளிநாட்டு நிறுவனங்களுக்கு கொடுப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ள நிலையிலேயே, புதிய கட்டண முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

தேவையான எரிபொருளைப் பெற்றுக்கொள்வதற்கு காலை 9.30 மணிக்கு முன்னர் எரிபொருளுக்கான கட்டணம் செலுத்தப்பட வேண்டும். இது சிரமமான ஒன்றாகும் என்றும் குமார் ராஜபக்ஷ தெரிவித்தார்.

## பாகிஸ்தான் வெள்ள நிவாரண திட்டம் கூட்டாக ஆரம்பிப்பு

2022 பாகிஸ்தான் வெள்ள நிவாரண திட்டத்தினை (FRP) பாகிஸ்தான் அரசாங்கமும் ஐக்கிய நாடுகள் சபையும் இணைந்து இஸ்லாமாபாத் மற்றும் ஜெனீவாவில் ஒரே நேரத்தில் ஆரம்பித்து வைத்தன.

பாகிஸ்தானின் பல்வேறு பகுதிகளில் 33 மில்லியனுக்கும் அதிகமான மக்களைப் பாதித்த பேரழிவுகளான மழை, வெள்ளம், நிலச்சரிவுகளின் பின்னணியில் பாகிஸ்தான் வெள்ள நிவாரண திட்டம் ஆரம்பிக்கப்படுகிறது.

350 க்கும் மேற்பட்ட குழந்தைகள் உட்பட 1,100 க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். 1,600 க்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். 287,000 க்கும் மேற்பட்ட வீடுகள் முழுமையாகவும் 662,000 பகுதியளவிலும் சேதமடைந்து உள்ளன. 735,000 க்கும் மேற்பட்ட கால்நடைகள் இறந்துள்ளன. 2 மில்லியன் ஏக்கர் பயிர்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன. தகவல் தொடர்பு, உள்கட்டமைப்புக்கு வசதிகளும் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

160.3 அமெரிக்க டொலர் மில்லியன் பெறுமதியான உயிர்காக்கும் நடவடிக்கைகளான உணவு பாதுகாப்பு, விவசாயம், கால்நடைகளுக்கான உதவிகள், தங்குமிட வசதிகள், உணவு அல்லாத பிற பொருட்கள், ஊட்டச்சத்து திட்டங்கள், ஆரம்ப சுகாதார சேவைகள், பாதுகாப்பு, நீர் மற்றும் சுகாதாரம், பெண்கள் சுகாதாரம், கல்வி ஒத்துழைப்பு, இடம்பெயர்ந்த மக்களுக்கான தங்குமிடம் ஆகிய 5.2 மில்லியன் மக்களின் தேவைகளில் இந்த வெள்ள நிவாரண திட்டம் கவனம் செலுத்துகிறது.

வெள்ள நிவாரண திட்டமானது முதன்மை மனிதாபிமான தேவைகள், முயற்சிகள், ஐ.நா மற்றும் பிற நலன் விரும்பிகளுடன் இணைந்து இந்தச் சவால்களை கையாள பாகிஸ்தான் அரசு எடுத்துள்ள நடவடிக்கைகளை விளக்குவதோடு பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் வகையில், நன்கு, ஒருங்கிணைந்த செயற்றிட்டத்தையும் கொண்டுள்ளது என இலங்கைக்கான பாகிஸ்தான் உயர்ஸ்தானிகராலயம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 1333 பற்றிய தெரிவித்தலுக்கு

### செப்டெம்பர் 04 முதல் 10 வரை

'சி.சி.சி லயின் 1333' (CCC line 1333) தொலைபேசி மூலமான இலவச நெருக்கடிநிலை உதவிச் சேவை, 2009 இல் இருந்து சேவையில் இருக்கும். சி.சி.சி லயின் மன்றத்தின் (CCC Line Foundation) தொழிற்பாடாகும்.

8 வருடங்களாக வருடா வரும் இடம்பெறும் 'பயிகத்தோன்' (Bikethon) நிகழ்ச்சியின் முக்கிய நோக்கம், எல்லா இலங்கையருக்கும், சி.சி.சி லயின், பற்றிய ஆழமான அறிவித்தலை வழங்குவதும், சி.சி.சி லயின் தொழிற்பாட்டுக்கான நிதி சேகரிப்பதுமாகும். 'பயிகத்தோன்' செயற்பாடானது 'உலக தற்கொலை தவிர்த்தல்' தினமான செப்டெம்பர் 10ஆம் நாளுக்கு சமாந்தரமாக 13 நாள்களாக 1333 கிலோ மீற்றர் தூரம் சைக்கிள் சவாரி செய்யும் நிகழ்ச்சியாகும்.

இலங்கையர்கள் மட்டுமன்றி வெளிநாட்டவர்களும் பங்குகொள்ளும் இந்நிகழ்வில், அவர்கள் இலங்கை முழுவதும் சுயவிருப்பில் சவாரியில் கலந்துகொண்டு சி.சி.சி லயின் பற்றிய ஆழமான அறிவித்தலை வழங்குவதுடன் நிதி சேகரிப்பதிலும் ஈடுபடுவார்கள்.

இன்றைய சமுதாயத்தில் மிகக் கடுமையான பிரச்சினையாக இருப்பது, அவர்கள் தமக்கு ஏற்படும் நெருக்கடி நிலைக்கு, விடைகாணமுடியாது, தம் உயிரையே மாய்த்துக்கொள்ளும் தீர்மானத்தை எடுப்பதாகும்.

அப்படிப்பட்ட அழிவு நிலையில் இருந்து மக்களை மீட்டெடுப்பதற்காக, அவர்களுடன் பேசி, அவர்கள் குறைகளைக் கேட்டறிந்து, சாதகமான சூழலைக் கண்டுகொள்ள வழிசெய்து, அவர்கள் மேற்கொள்ளவிருந்த தவறான முடிவுகளிலிருந்து விடுபட்டு, சக்திமிக்கவர்களாக ஆக்குவதே சி.சி.சி லயின் மேற்கொள்ளும் செயற்பாடாகும்.

எந்த நாளிலும், எந்த நேரத்திலும் (24x7) என்ற தொலைபேசி சேவையின் ஊடாகவும், 1333 இலக்கத்துக்கு இலவசமாக தொடர்புகொண்டு சேவையை பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி அழைப்பை ஏற்படுத்துவோருக்கு உதவுவதற்காக, அவுஸ்திரேலியாவில் 'லைப்லயின்' (LifeLine) நிறுவனத்தில் சிறந்த பயிற்சிபெற்ற சேவையாளர்கள் சி.சி.சி லயின் 1333 இல் உள்ளார்கள். அழைப்பாளர்கள் மூன்று மொழிகளிலும் சேவையை பெற்றுக்கொள்ளும் வசதியும் உண்டு.

நம்நாட்டில் தற்போதுள்ள நிலையைக் கணக்கிலெடுத்து இம்முறை குறிப்பிட்ட சவாரியார்கள் 'பயிகத்தோன்' நிகழ்ச்சியில் பங்குப்பற்றுவதுடன் அவர்கள் செல்லும் தூரம் குறைக்கப்பட்டு, சவாரி செப்டெம்பர் 4முதல் (நேற்று) செப்டெம்பர் 10 வரையிலும் இடம்பெறும்.

சி.சி.சி. லயின் 1333 என்பது சி.சி.சி லயின் மன்றத்தின் முகாமையிலுள்ள இரண்டாவது செயற்பாடாகும். சி.சி.சி ஹவுஸ் (CCC House) என்பது புற்றுநோயாளர் தங்கியிருந்து சிகிச்சைபெறும் நிலையமாகும். வெளிமாவட்ட நோயாளர்கள் ஒவ்வொரு நாளும் சிகிச்சை பெறவேண்டுமாயின் இங்கு தங்கி சிகிச்சை பெறுவர்.

சி.சி.சி மன்றம் என்பது, சேவை நோக்கம் கொண்ட அங்கத்தவர்களால் நிர்வகிக்கப்படும் அரச அனுமதிபெற்ற சேவை நிலையமாகும். சி.சி.சி மன்றம் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக சேவையில் உள்ளது. மேலதிக விவரங்களுக்கு 1333 ஐ அழைக்கவும்.

## சுங்க அதிகாரிகளில் 100 பேருக்கு சிக்கல்

தங்களுக்கு நெருக்கமானவர்களை வரி விதிப்பில் இருந்து கோடீஸ்வர வர்த்தகர்கள் சிலரை தப்பிக்க உதவி செய்து வரும் 100 க்கும் அதிகமான சுங்கத் திணைக்கள அதிகாரிகள் தொடர்பில் புலனாய்வுப் பிரிவு, அரசாங்கத்துக்கு அறிக்கை வழங்கியுள்ளது.

இந்த ஊழல் அதிகாரிகள் தொடர்பில் மேலதிக தகவல்களை வழங்க வேண்டுமென புலனாய்வுப் பிரிவினருக்கு அரசாங்கம் அறிவுறுத்தியுள்ளது.

சுங்கம், இறைவரித் திணைக்களத்தில் இருந்து அரசாங்கத்துக்குக் கிடைக்க வேண்டிய கோடிக்கணக்கான வரிப் பணம், இதுபோன்ற ஊழல் செயற்பாடுகளால் இழக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைத் தடுப்பதற்கு அரசாங்கத்துக்கு கிடைக்கும் வருமானத்தை நிர்வகிப்பதற்கென முறையான நிறுவனம் ஒன்றை ஸ்தாபிப்பதற்கும் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அண்மையில் கூடிய ஆளுங்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் குழுக் கூட்டத்தில் இந்த விவகாரம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.




## முழுமையாகக் கணக்காய்வு செய்ய நடவடிக்கை



தனது அமைச்சுக்குக் கீழுள்ள அனைத்து நிறுவனங்களையும் முழுமையாக கணக்காய்வுக்கு உட்படுத்தப்படும் என நகர அபிவிருத்தி, வீடமைப்பு அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

இதற்குத் தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டுமென அமைச்சின் செயலாளருக்கு அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார். அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடல் ஒன்றின்போதே அமைச்சர் மேற்கண்டவாறு ஆலோசனை வழங்கியுள்ளார்.

தனது உரிமைகளைப் பாதுகாத்துக்கொள்வதற்குப் பதிலாக தனக்குக் கீழுள்ள ஊழியர்களின் உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். கடந்த காலத்தில் தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக 137 மில்லியன் ரூபாய்க்குப் சுவரொட்டிகள் மாத்திரம் அச்சிடப்பட்டுள்ளதாகவும் இது தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலையில் நட்டமடையும் அரச நிறுவனங்கள் மூடப்பட்டு வருவதாகவும், இவ்வாறான நிலையில் அந்தந்த நிறுவனங்களை பாதுகாத்துக்கொள்வது நிறுவன ஊழியர்களின் கடமை எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## துப்பாக்கிச் சூட்டில் நேற்றும் ஒருவர் பலி

தல்கஸ்வல, பிட்டிக்கல பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் 31 வயதுடைய நபர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். தனது மோட்டார் சைக்கிளில் நகரத்துக்கு சென்றுவிட்டு, வீட்டுக்கு திரும்பிக்கொண்டிருந்தபோது, அவரது வீட்டின் அருகே மறைந்திருந்த நபர், திடீரென துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார். இதனை தொடர்ந்து, அவர் எல்பிடிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். அதன்பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதித்தப்போது அவர் உயிரிழந்துள்ளார். வட்டிக்கு வழங்கப்பட்ட பணக் கொடுக்கல் வாங்கல் விவகாரமொன்றுக்காக இந்தத் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். பிட்டிக்கல பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## அற்றோர்ணி தத்துவத்தை இரத்துச் செய்தல்

மத்திய மாகாணம் கண்டி மாவட்டத்தில் மய்லபிடிய பாதமய்லபிடிய என்ற இடத்தில் வசிக்கும் இல்லகொல்ல உடகலஉட ராஜமந்ரீ கெதர விமலசேன (தே. அ. அ. இல. 690051966V) ஆகிய நான் கண்டியில் பிரசித்த நொத்தாரிசு சகுந்தலா ஹேரத் என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1005 ஆம் இலக்க 2019 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 04 ஆம் திகதியிடப்பட்ட அற்றோர்ணி தத்துவத்தின் மூலம் என்னுடைய அற்றோர்ணி அதிகாரத்தை கண்டி மாவட்டத்தில் பேராதெனிய கொடகந்தெனிய இல. 207/பீ என்ற முகவரியில் வசிக்கும் ராஜபக்ஷகே நதீஷா குமாரி (தே. அ. அ. இல. 916770979V) என்பவர் என்னால் நியமிக்கப்பட்டார் அந்த அற்றோர்ணி அதிகாரத்தை இரத்துச்செய்து நீக்கப்பட்டு செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ளது என்பதனை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்திற்கும் அதன் வாழ் பொது மக்களுக்கும் இதன் மூலம் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மீண்டும் டெங்கு அபாயம்:

# வெற்றுக் காணிகளை துப்புரவு செய்யுங்கள்

■ எம்.எஸ்.எம். ஹனீபா

பொத்துவில் பிரதேசத்தில், மீண்டும் டெங்கு பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதால், டெங்கு நுளம்பு பரவக் கூடிய வெற்றுக் காணிகளை வைத்திருப்போர், ஒரு வார காலத்துக்குள் காணிகளை துப்புரவு செய்யுமாறு, பொத்துவில் சுகாதார வைத்தியதிகாரி டொக்டர் ஏ. யூ அப்துல் சமட், நேற்று (04) தெரிவித்தார்.

தற்போது, அடிக்கடி மழை பெய்து வருவதால் டெங்கு நுளம்பு பெருகும் அபாயம் தோன்றியுள்ளது. எனவே, பொதுமக்கள் மிக அவதானமாக செயற்படுமாறு அறிவித்துள்ளார்.



டெங்கு நுளம்பு பரவாமல் தடுக்கும் பொருட்டு, பொதுச் சுகாதார பரிசோதகர்கள், டெங்கொழிப்புச் செயலணி, பொலிஸார் ஆகியோர் வீடு வீடாகச் சென்று, டெங்கு நோய் தொடர்பாக மக்களுக்கு விழிப்பூட்டல், டெங்கு நுளம்பு பரவக் கூடிய இடங்களை துப்புரவு செய்தல் போன்ற வேலைத்திட்டங்களில் ஈடுபட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

டெங்கு நுளம்பு பரவாமல் தடுப்பதற்கு, சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்துக்கொள்ளல், அவற்றின் வதிவிடத்தை முற்றுமுழுதாக அழித்தல், நுளம்பின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்தல் என்பன முக்கியமானதாகும், இது தொடர்பாக மக்களுக்கு துண்டுப்பிரசுரம் மூலமும், ஒலிபெருக்கி ஊடாகவும் அறிவித்தல் விடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவித்தார்.

டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவினர் வீடுகளுக்கு வரும் போது உரிமையாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் கேட்டுள்ளார்.


யாழில் பாணின் விலையை அதிகரித்தால்

# சலுகைகள் நிறுத்தப்படும்

■ எம்.றொசாந்த்

யாழில் பாணின் விலையை அதிகரிக்க வேண்டிய தேவையில்லை. அதனையும் மீறி பாணின் விலையை அதிகரித்தால், வெதுப்பக உரிமையாளர்களுக்கு வழங்கப்படும் சலுகைகள் அனைத்தும் இரத்து செய்யப்படும் என யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு வெதுப்பக உரிமையாளர் சங்க தலைவர் கந்தசாமி குணரட்ணம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் பாண் விலை அதிகரிப்பு தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போதே மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது;



“யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள வெதுப்பகங்களுக்கு, பிறீமா நிறுவனத்தின் கோதுமை மா வழங்கப்படுகிறது. அது தொடர்ச்சியாக வழங்கப்படும். அதன் விலையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. 12,500 ரூபாய்கு பிறீமா நிறுவனத்தினரால் எமக்கு மா வழங்கப்படுகின்றது.

“இந்நிலையில், கொழும்பில் பாணின் விலை உயர்த்தப்படுவதற்காக யாழ்ப்பாணத்தில் பாணின் விலையை அதிகரிக்க வேண்டிய தேவையில்லை.

“எனவே, யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 200 ரூபாய்க்கு மேல் பாணின் விலையை அதிகரிக்க தேவையில்லை. அவ்வாறு யாராவது பாணின் விலையை அதிகரித்து விற்றால், அவர்களுக்குரிய எரிபொருள் மற்றும் எரிவாயு பெறுவதற்கான சலுகைகள் நீக்கப்படக்கூடிய சாத்திய கூறுகள் காணப்படுகின்றன .

“யாழ்.மாவட்டச் செயலாளரின் பணிப்பின் பேரில், அதிகாரிகள் பாணின் விலை தொடர்பில் கண்காணிப்பார்கள். அவ்வாறு கண்காணித்து அதிக விலைக்கு பாண் விற்பனை செய்வது கண்டறியப்பட்டால், சலுகைகள் நிறுத்தப்படக்கூடிய சாத்திய கூறுகள் உள்ளன.

“வெதுப்பக உரிமையாளர்கள் யாருக்காவது கோதுமை மா தேவைப்பட்டால், எமது சங்கத்துடன் தொடர்புகொள்வதன் மூலம் அவர்களுக்குரிய மாவை கட்டுப்பாட்டு விலையில் பெற்றுக் கொடுக்க முடியும். அதனால் அதிக விலைக்கு பாணினை விற்க வேண்டிய தேவை இல்லை” என்றார்.

ஊருக்குள் புகுந்த

## காட்டு யானையால் பதற்றத்தில் மக்கள்



■ ஹஸ்பர்

திருகோணமலை, தம்பலகாமம் பிரதேச செயலகப் பகுதியில் 98ஆம் கட்டை தாயிப் நகர் மற்றும் 97 சேனாவளி குளத்தை அண்டிய வயல் பகுதியில் நேற்று (04) அதிகாலை காட்டு யானை புகுந்ததால் மக்கள் அச்சமடைந்துள்ளனர்.

வயல் நிலங்கள் தற்போது சிறுபோக அறுவடைக்குத் தயாரான நிலையில், நெற்பயிர்களை யானை அழித்து விட்டுச் செல்வதாகவும் விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

பசளை இன்றி பெரும் சிரமத்துக்கு மத்தியில், நெற் செய்கையை செய்கை செய்து, அறுவடைக்கு இன்னும் இரு வாரங்கள் உள்ள நிலையில், நெற்செய்கையை யானை துவம்சம் செய்து விட்டுச் செல்வதாக, அப்பகுதி விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

காட்டு யானையிடம் இருந்து தங்களைப் பாதுகாக்க, துரித நடவடிக்கை எடுக்குமாறும் உரிய அதிகாரிகளிடத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுக்கின்றனர்.

156ஆவது பொலிஸ் தினம்

## மட்டக்களப்பில் கொண்டாட்டம்

■ எம்.எஸ்.எம்.நூர்தீன், ஏ.எச்.ஏ. ஹுஸைன்





156ஆவது தேசிய பொலிஸ் தினத்தை முன்னிட்டு, தேசிய பொலிஸ் வார நிகழ்வு, மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அலுவலக வளாகத்தில், நேற்று முன்தினம் (03) நடைபெற்றது..

இதில் மட்டக்களப்பு மாவட்ட பிரதி பொலிஸ் மாஅதிபர் எல்.யு சரத்குமார் கலந்துகொண்டு, பொலிஸ் கொடியை ஏற்றிவைத்ததுடன், பொலிஸ் கீதமும் இசைக்கப்பட்டது. நிகழ்வில், மட்டு. தலைமையக பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட பொலிஸ் அதிகாரிகள் கலந்துகொண்டனர். இதன்போது, பொலிஸ் அதிகாரிகளுக்கு சன்மானம் வழங்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டனர்.

இதேவேளை, ஏறாவூர் பொலிஸ் நிலைய வளாகத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில், போதைப்பொருள் ஒழிப்பில் அர்ப்பணிப்போடு கடமையாற்றிய ஏறாவூர் பொலிஸார் 56 பேருக்கு, ரூபாய் 8 இலட்சத்து 25,250 ரூபாய் சன்மானத் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டதாக, ஏறாவூர் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரதான பொலிஸ் பரிசோதகர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பாடசாலைகளின்

## நீர், மின் கட்டணங்களை அரசாங்கம் செலுத்தவும்



■ ஹஸ்பர்

கிழக்கு மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் இதுவரை காலமும் அரசாங்கத்தால் செலுத்தப்பட்டு வந்த நீர் கட்டணங்களை, இனிமேல் பாடசாலைகள்தான் பொறுப்பேற்க வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

அதேபோன்று, மின் கட்டணங்களை செலுத்துவதற்கு ரூபாய் 1,200 வழங்கப்படுகிறது. வேறு மாகாணங்களில் இதைவிட கூடுதலாக வழங்கப்படுகிறது.

எனினும், கிழக்கு மாகாண பாடசாலைகள் கஷ்டத்தை எதிர்கொள்வதால் இந்தக் கட்டணங்களை அரசாங்கம் முழுமையாகச் செலுத்த நடவடிக்கை மேற்கொள்ளுமாறு திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப், அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்தார்.

மேலும், வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற அம்பியூலன்ஸ்களுக்கு QR முறை ஊடாக 50 லீட்டர் பெட்ரோல் பெறுவதற்கான வாய்புகள் மாத்திரம் காணப்படுவதாகவும் அதேபோன்று ஓட்டோகளுக்கும் 5 லீட்டர் பெட்ரோல் போதாது உள்ளமையால் அம்பியூலன்ஸ், ஓட்டோகளுக்கு மேலதிக எரிபொருள் வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அவர் அரசாங்கத்தை கேட்டுக்கொண்டுள்ளார்.

அபிவிருத்தி பணிகள் தொடர்பில்

## உபவேந்தர் ஆராய்வு



■ நூறுல் ஹுதா உமர்

மல்வத்த விவசாய தொழில்நுட்பவியல் பூங்காவில் இடம்பெறுகின்ற அபிவிருத்திப் பணிகள் தொடர்பில் அதிகாரிகளை நேரடியாகச் சந்தித்துக் தகவல்கள் தெரிந்துகொள்ளும் நோக்கில், திடீர் விஜயமொன்றை உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் மேற்கொண்டார்.

இவ்விஜயத்தின் போது, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்பவியல் பீடாதிபதி யூ.எல்.எம் மஜீத் தலைமையில், மல்வத்தை விவசாய தொழில்நுட்பவியல் பூங்கா கேட்போர் கூடத்தில் உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கருடனான கலந்துரையாடல் நடைபெற்றது.

இக்கலந்துரையாடலில், விவசாய தொழில் நுட்பவியல் பூங்காவின் நாளாந்த செயற்பாடுகளை அவதானித்த உபவேந்தர், தற்போதுள்ள பிரச்சினைகள், தேவைகள் தொடர்பில் பீடாதிபதி மற்றும் துறைத் தலைவர்களிடம் கேட்டு அறிந்து கொண்டார்.

மாணவர்களுக்குரிய பயிற்சி, சந்தைப்படுத்தல், ஆராய்ச்சி ஆகியவை நிறுவனத்தின் முக்கிய செயற்பாடுகளாகும். ஆகவே, இலக்கு வைக்கப்பட்ட திட்டங்களை செயற்படுத்தும்போது, தேவையை மாத்திரம் கவனத்தில்கொள்ள வேண்டுமென்று வலியுறுத்திய உபவேந்தர், எதிர்காலத்துக்காக திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்களை தாமதிக்காமல் மிக விரைவாக செயற்படுத்துமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுரைகளை வழங்கினார்.

பல்கலைக்கழக தொழில்நுட்பவியல், விவசாய பீட மாணவர்களின் கல்வி ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கான மேலதிக வசதிகளையும் இந்நிலையம் வழங்க வேண்டும் எனவும் உபவேந்தர், அதிகாரிகளை கேட்டுக் கொண்டார்.

தொழில்நுட்பவியல் பூங்கா பண்ணையைப் பார்வையிட்ட உபவேந்தர், அங்கு இடம்பெறும் சேதனப்பசளை, உர உற்பத்தி உள்ளிட்ட சேவைகளை விரிவுபடுத்துமாறும் பீடாதிபதி மற்றும் துணைத் தலைவர்களிடத்தில் பணிப்புரை விடுத்தார்.

யாழில் சைக்கிள் திருட்டு:

## ஊர்காவற்றுறையில் பதுங்கிய இருவர் கைது

### முறையிட முன்வாருங்கள்



■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணத்தில் மூன்று இடங்களில் சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட இருவர், ஊர்காவற்றுறையில் பதுங்கியிருந்த நிலையில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையம், யாழ்.போதனா வைத்தியசாலை, குருநகர் சின்னக்கடை சந்தை பகுதி ஆகிய மூன்று இடங்களிலும் அண்மைய நாள்களில் சைக்கிள்கள் திருட்டுப் போயுள்ளன.

எனினும், ஒருவர் மாத்திரமே தனது சைக்கிள் களவாடப்பட்டுள்ளதாக யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

அவரின் முறைப்பாட்டின் அடிப்படையில், யாழ்.மாவட்ட குற்றத்தடுப்பு புலனாய்வு பிரிவினர் விசாரணைகளை முன்னெடுத்த நிலையில், யாழ்ப்பாணத்தில் சைக்கிள்களை களவாடிய பின்னர் ஊர்காவற்றுறை, நாரந்தனை பகுதியில் தலைமறைவாகும் இருவர் தொடர்பில் தகவல்கள் கிடைக்கப்பெற்றன.

அங்கு விரைந்த புலனாய்வு பிரிவினர், 37, 38 வயதுடைய இருவரை கைது செய்துள்ளனர். கைது செய்யப்பட்ட இருவரிடமும் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் , அவர்கள் இருவரும் யாழில் திருடிய 03 சைக்கிள்களை மீட்கப்பட்டன.

கைது செய்த இருவரையும், அவர்களிடம் இருந்து மீட்கப்பட்ட மூன்று சைக்கிள்களையும் ஊர்காவற்றுறை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

யாழில் பரவலாக சைக்கிள் களவுகள் அதிகரித்துள்ளன. அவை தொடர்பில் உரிமையாளர்களால் பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடுகள் மேற்கொள்ளப்படாமையால் பொலிஸாரால் மேலதிக நடவடிக்கைகளை எடுக்க முடியவில்லை.

எனவே, முறைப்பாடுகளை மேற்கொள்வதன் ஊடாக, திருடர்களை பிடிக்க முடியும் என பொலிஸ் தரப்பு தெரிவிக்கின்றது.

வீதியில் கண்டெடுத்த நகையை

## உரியவரிடம் ஒப்படைத்த இளைஞர்கள்

### மானிப்பாய் பொலிஸார் பாராட்டு

■ எம்.றொசாந்த்

வீதியில் கண்டெடுத்த இரண்டு பவுண் தங்க கைச் சங்கிலியை மானிப்பாய் பொலிஸாரிடம் ஒப்படைத்த இளைஞர்களை, பொலிஸார் பாராட்டியுள்ளதுடன் , கைச் சங்கிலியின் உரிமையாளரை கண்டறிந்து, அந்த இளைஞர்களின் கைகளால் உரிமையாளரிடம் அதனை சேர்ப்பித்துள்ளனர். மானிப்பாய் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் வெள்ளிக்கிழமை (02)இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

சங்கானை பகுதியை சேர்ந்த ச.சபேஷ் (வயது 32), ர.றொபீகன் (வயது 20), ம. கோகுலன் (வயது 25) ஆகிய மூவரும் மாகியப்பிட்டி ஊடாக பயணித்த வேளை, வீதியில் விழுந்து கிடந்த இரண்டு பவுண் கைச்சங்கிலியை கண்டெடுத்து, அதனை மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்துள்ளனர். கைச் செயினை தவறவிட்டவர் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்த வேளை, மாகியப்பிட்டி பகுதியை சேர்ந்தவர் தனது கைச் செயினை தவறவிட்டதை தெரிவித்துள்ளார்.

அவரிடம் கைச் செயின் தொடர்பிலான அடையாளங்களை கேட்டறிந்து, அவருடையது தான் என்பதை உறுதிப்படுத்திக் கொண்ட பொலிஸார் , கைச் செயினை கண்டெடுத்து தம்மிடம் ஒப்படைத்த இளைஞர்களை அழைத்து பாராட்டி, அவர்கள் கைகளினால் உரிமையாளரிடம் அதனை கையளித்தனர்.

## தொண்டைமானாற்றில் முதலைகள்


### சந்நிதியான் பக்தர்களுக்கு எச்சரிக்கை

■ எம்.றொசாந்த்

தொண்டைமானாறு ஆற்றில் முதலைகளின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டு உள்ளமையால், செல்வச்சந்நிதி கோவிலுக்கு வருகை தந்து ஆற்றில் நீராடுவோர்களை அவதானமாக நீராடுமாறு, சந்நிதியான் நிர்வாகம் கோரியுள்ளது.

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற செல்வச் சன்னதி கோவில் வருடாந்த மகோற்சவம் ஆரம்பமாகி வெகு விமரிசையாக நடைபெற்று வருகின்றது.

நாட்டின் பல பாகங்களிலிருந்தும் வருகை தந்து ஆற்றில் நீராடி முருகனை வழிபட்டு வருகின்றனர்.



இந்நிலையில், ஆற்றில் முதலைகளின் நடமாட்டம் அவதானிக்கப்பட்டு உள்ளமையால், ஆற்றில் போடப்பட்டுள்ள மிதவைகளை தாண்டி, ஆழமான பகுதிகளுக்கு சென்று நீராட வேண்டாம் எனவும் நீராடும் போது உதவிக்கு ஆட்களை அழைத்து சென்று, ஆற்றை மிக அவதானமாக கண்காணித்து நீராடுமாறும் கோரியுள்ளனர்.

கட்டாக்காலிகளால்

## விவசாயிகள் பெரிதும் அவதி

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கு உட்பட்ட பாண்டியன்குளம், மாந்தை கிழக்கு வயல் பகுதிகளுக்குள் இறங்கி பயிர்களை நாசம் செய்யும் கட்டாக்காலி கால்நடைகளால் வயல்நிலங்கள் பெரிதும் நாசமாக்கப்படுவதாக பிரதேச விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

அறுவடை காலம் நெருங்கிக் கொண்டிருக்கும் வேளையில், பல கிராமங்களில் அறுவடைகள் இன்னமும் தொடங்கப்படாத நிலையில் வயல்களுக்குள் இரவில் இறங்கி, நாசம் செய்யும் கட்டாக்காலிகளை கட்டுப்படுத்த அவர்கள் கோருகின்றனர்.

கட்டாக்காலிகளை கட்டுப்படுத்தும் திட்டம் கடந்த 30ஆம் திகதியுடன் முடிவடைந்துள்ள நிலையில், பிரதேச கமநல உத்தியோகத்தருக்கு இது தொடர்பில் விவசாயிகளால் முறையிடப்பட்டுள்ளது.

## கோதுமை மா தட்டுப்பாட்டால்

# பெரும் பாதிப்பு

ரஞ்சித் ராஜபக்‌ஷ

இலங்கையில் கோதுமை மாவை விநியோகிக்கும் பிரதான இரண்டு நிறுவனங்களுக்கும் தேவையான கோதுமை மா கிடைக்காமை காரணமாக, தனியார் வர்த்தக நிலையங்களில் இருந்து, அதிக விலைக்கு கோதுமை மாவை கொள்வனவு செய்ய நேரிட்டுள்ளதாக நுவரெலியா மாவட்ட பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் 450 கிராம் பாண் உள்ளிட்ட ஏனைய உற்பத்திப் பொருட்களின் விலையை அதிகரிக்க நேரிட்டுள்ளதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

சந்தையில் 50 கிலோ கிராம் நிறையுடைய ஒரு மூடை கோதுமை மா 18,000 ரூபாய் தொடக்கம் 20,000 ரூபாய் வரையான, அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுவதாகவும் வர்த்தகர்கள் சிலர் தொகையாக கோதுமை மாவை சேகரித்து, சந்தையில் தட்டுபாடு நிலவும் நேரங்களில் அதிக விலைக்கு விற்பனை செய்வதாகவும் பேக்கரி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

கோதுமை மாவுக்குக் கட்டுப்பாட்டு விலை இல்லாத காரணத்தால், மொத்த வியாபாரிகள் கோதுமை மாவை வெவ்வேறு விலைக்கு விற்பதால் 450 கிராம் பாண், 300-320 ரூபாய்க்கும், ஒரு பணிஸ் 110 ரூபாய்க்கும் விற்க நேரிட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர்.



நுவரெலியா மாவட்டத்தில் அதிகளவான மக்கள் பேக்கரி தொழிலில் ஈடுபட்டுள்ள போதிலும், கோதுமை மாவின் விலை அதிகரிப்பு, பேக்கரி பொருட்களின் விலை அதிகரிப்பு காரணமாக, பலர் அத்தொழிலை விட்டு விலகியுள்ளதாக, ஹட்டன் நகர பேக்கரி உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் பசீர் மொஹமட் தெரிவித்தார்.

இதேவேளை, தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளம் 1,000 ரூபாயாக காணப்படும் அதேவேளை, அந்தச் சம்பளத்தில் ஒரு கிலோ கிராம் கோதுமை மாவையே, ஒரு இறாத்தல் பாணையோ வாங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தோட்டத் தொழிலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தேயிலைத் தோட்டங்களில் தொழில் செய்யும் தாம் பாண், கோதுமை மா உள்ளிட்ட உணவுகளை இரண்டு வேளை உண்பதாகவும், தமது மக்கள் நீண்ட காலமாக கோதுமை மாவைச் சார்ந்த உணவுக்குப் பழகியுள்ளதுடன் அது தமக்கு சமைப்பதற்கு வசதியாக இருப்பதாகவும் தெரிவிக்கின்றனர்.

இந்த நிலையில்,கோதுமை மாவின் விலை அதிகமாக இருந்தாலும் சந்தையில் கொள்வனவு செய்ய முடியாதெனத் தெரிவிக்கும் தோட்டத் தொழிலாளர்கள், வாழ்க்கைச் செலவு அதிகரிப்பால், மூன்று வேளையும் சோறு சாப்பிட முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கின்றனர்.

எனவே, பெருந்தோட்ட மக்களுக்கு அரசாங்கம் கோதுமை மா மானியத்தை வழங்க வேண்டுமென தோட்டத் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## இலங்கை பொலிஸின் 156 வருட நிறைவு

இலங்கையில் பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 156 ஆண்டுகள் பூர்த்தியை முன்னிட்டு, மலையகத்தின் ஹட்டன், தலவாக்கலை, நுவரெலியா, பதுளை உள்ளிட்ட பிரதான பொலிஸ் நிலையங்களில், பல சமூக, சமய நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன.

(மலையக நிருபர்கள்)

















## நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கான

# புதிய அபிவிருத்தி குழு நியமனம்



எஸ். கே. குமார்

நுவரெலியா மாவட்ட பொது வைத்திய சாலையின் 2022 முதல் 2025 ஆம் ஆண்டுவரையிலான புதிய அபிவிருத்தி குழு சுகாதார அமைச்சால் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

இவ்வாறு நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு தெரிவு செய்யப்பட்ட வைத்தியசாலை அபிவிருத்தி குழு நிர்வாக சபையினருக்கான நியமனக் கடிதங்கள் உத்தியோகபூர்வமாக நேற்று (04) வழங்கப்பட்டன.

நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நடைபெற்ற நிகழ்வின் போது, நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலை இயக்குநர் வைத்தியர் மகேந்திர செனவிரட்ன, பிரதி இயக்குநர் திருமதி பாமினி நவரட்னம் ஆகியோரால் இந்த நியமனக் கடிதங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

இக்குழுவின் தலைவராக பி. மகேஸ்வரன் ( முன்னாள் நுவரெலியா ரோட்டரிக் கழக தலைவர் ) செயலாளர் பிரியந்த (வைத்தியசாலை நிர்வாக உத்தியோகத்தர்) பொருளாளர் என். நெடுமாறன், ( நுவரெலியா லயன்ஸ் கழக முன்னாள் தலைவர்) உப தலைவர் ஜி.அப்துல் ரஹிம், இணைப்புச் செயலாளர் அல்ஹாஜ் சஹீர்ஹுசைன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்கள்.

செயற்குழு உறுப்பினர்களாக எல். ஜி. மஹிந்த சில்வா ( நுவரெலியா மாநகர சபை உறுப்பினர்) எ. எம் பளீல் (நுவரெலியா மாநகர சபை முன்னாள் உறுப்பினர்) சமீந்த கொடிக்கார, நீலியன் யோகேன் உட்பட 21 உறுப்பினர்களுக்கு நியமன கடிதங்கள் வழங்கப்பட்டன.

## குடாஓயா மயானத்தில்

# புதைப்பதில் சிரமம்

சுதத்.எச்.எம்.ஹேவா

ஹட்டன், குடாஓயா பொது மயானமும் அதனை அண்டிய பிரதேசமும் நீண்ட நாள்களாக முறையாக சுத்தம் செய்யப்படாததால், பற்றைக்காடாக மாறியுள்ளது.

இந்த இடங்கள் காடாக மாறிவருவதால், குறித்த பொது மயானத்தில் புதைப்பதற்காக, சடலங்களைக் கொண்டு செல்பவர்கள், பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

குறிப்பாக, மழை நாள்களில் இந்த மயானத்திற்கு சடலத்தை எடுத்துச் செல்வது மிகவும் கடினமாக உள்ளதென்றும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் கருத்து தெரிவித்த ஹட்டன்- டிக்கோயா நகர சபையின் தவிசாளர் சடையன் பாலச்சந்திரன், இந்த மயானத்தை



சுத்தப்படுத்தி அழகுபடுத்துவதற்கு திட்டமிடப்பட்டு உள்ளதாகவும் இத்திட்டம் விரைந்து செயற்படுத்தப்பட்டு, மயானத்தை சீரமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

## 500 குடும்பங்களுக்கு

# காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன

ரஞ்சித் ராஜபக்‌ஷ

மக்கள் பெருந்தோட்ட அபிவிருத்தி சபைக்குச் சொந்தமான தோட்டங்களில், பல வருடங்களாக வசிக்கும் 500 குடும்பங்களுக்கு தலா ஏழு பேர்ச்சஸ் காணிகளுக்கான உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தலைமையில், நாவலப்பிட்டியில் இந்த நிகழ்வு நடைபெற்றது. இதற்கமைய, நாவலப்பிட்டி தொகுதியின் கலபொட, மவுன்ட்ஜின், நாகஸ்தான்ன, போஹில், கந்தல்ஓயா, கொலோபதன, மஹாவில ஆகிய தோட்டங்களில் வசிக்கும் 500 குடும்பங்களுக்கு குறித்த காணி உறுதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.



# 730 லீற்றர் டீசலுடன் ஒருவர் கைது

மொஹொமட் ஆஸிக்



கண்டி- மாத்தளை வீதியில் அக்குறணை நகர எல்லையில், லொறியொன்று சோதனைக்கு உள்ளாக்கப்பட்ட போது, அதில் கொண்டு செல்லப்பட்ட 730 லீட்டர் டீசலுடன், நபர் ஒருவர், அலவத்துகொடை பொலிஸாரால் இரண்டாம் திகதி கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கமைய, குறித்த லொறி சோதனைக்குட்படுத்தப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை எதிர்வரும் 7ஆம் திகதி, கண்டி நீதவான் முன்னிலையில், ஆஜர் செய்ய உள்ளதாகவும் அலவத்துகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

# சுற்றுலாப் பயணிகளால் நுாரளையில் 'கொவிட்-19' அச்சம்

## பொதுச் சுகாதார அதிகாரிகள் எச்சரிக்கை

எஸ். கே. குமார்

நுவரெலியாவுக்கு வார இறுதி நாள்கள் மற்றும் விடுமுறை நாள்களில் படையெடுக்கும் சுற்றுலாப் பயணிகள், கொவிட்-19 பாதுகாப்பு சுகாதார விதி முறைகளைப் பின்பற்றுமாறு, நுவரெலியா பொதுச் சுகாதார அதிகாரிகள் ஆலோசனை தெரிவித்துள்ளனர்.

வெளிமாவட்டங்களிலிருந்தும் வெளி நாடுகளிலிருந்தும், பெருந்தொகையான சுற்றுலாப் பயணிகள் நுவரெலியாவுக்கு வருகை தருகின்றார்கள். சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்து வருவதால், மீண்டும் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து விடும் என்ற அச்சம் நுவரெலியா வாழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது என்றும் அதிகாரிகள் எச்சரித்துள்ளனர்.

இவ்வாறு வருகை தரும் சுற்றுலாப் பயணிகள் அதிகமானோர் முகக்கவசம் அணியாமல், சமூக இடைவெளியை பின்பற்றாமல் சுகாதார வழிக்காட்டு முறைகளை அலட்சியப்படுத்தி நடமாடுவதை காணமுடிகிறது.

சுற்றுலா பயணிகளின் வருகை காரணமாக லவர் சீலிப் நீர் வீழ்ச்சி, விக்டோரியா பூங்கா, கிரஹரி வாவி பூங்கா, சந்ததென்ன உலக முடிவு, சீத்தாஎலிய கோவில் போன்ற பகுதிகளுக்குச் சென்று வருகின்றனர்.

இதனால் நுவரெலியா - பதுளை வீதி, நுவரெலியா - கண்டி வீதி, நுவரெலியா - ஹட்டன், அவிசாவளை வீதி போன்ற பிரதான வீதியெங்கும் வெளிமாகாண இலக்கத்தகடு பதிக்கப்பட்ட வாகனங்கள் அணிவகுத்துச் செல்கின்றமையால் பிரதான பாதைகளில் கடுமையான வாகன போக்குவரத்து நெரிசல் ஏற்படுகின்றது.

நுவரெலியாவிலுள்ள ஹோட்டல்கள், சுற்றுலா விடுதிகளில் அறைகள் நிரம்பி வழிவதாக சுற்றுலா விடுதிகளின் உரிமையாளர்களும் தெரிவிக்கின்றனர்.

ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருகின்ற போதிலும், நாட்டில் உள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக பொருட்கள் கொள்வனவு செய்வதில் சுற்றுலாப் பயணிகள் தயக்கம் காட்டி வருவதாகவும் வர்த்தக நடவடிக்கைகள் சூடு பிடிக்கவில்லை எனவும், சுற்றுலாப் பயணிகள் தங்களது அத்தியாவசிய தேவைகளை மாத்திரம் பூர்த்தி செய்து கொள்வதற்கு மாத்திரம் பொருட்கள் கொள்வனவில் ஈடுபடுவதாக வர்த்தகர்கள் தெரிவிக்கின்றனர்.



சுற்றுலாப் பயணிகளாக வருகை தந்தவர்களில் பெருபாலானவர்கள், சுகாதார விதி முறைகளை பின்பற்றத் தவறுவதால், எதிர்காலத்தில் கொரோனா வைரஸ் தொற்று ஏற்படக்கூடிய வாய்ப்புகள் அதிகமாகக் காணப்படுவதாகவும் எனவே, சுற்றுலாப் பயணிகள் சுகாதார விதி முறைகளை பின்பற்றுமாறும் பொது சுகாதார பிரிவினர்ஆலோசனை வழங்கியுள்ளனர்.

சுகாதார வழி முறைகளைப் பின்பற்றாதவர்களுக்கு எதிராக, எச்சரிக்கை விடுத்து, அபராதம் விதிக்க நடவடிக்கை எடுக்க ஆலோசித்து வருவதாகவும் நுவரெலியா பொதுச் சுகாதார அதிகாரிகள் தெரிவித்தனர்.

## போதைப் பொருட்களுடன்

# எழுவர் ஹட்டனில் கைது



ரஞ்சித் ராஜபக்‌ஷ

ஹெரோய்ன், கஞ்சா ஆகிய போதைப் பொருட்களைத் தம்வசம் வைத்திருந்தனர் என்ற குற்றச்சாட்டின் கீழ், ஹட்டன் கலால் அலுவலக அதிகாரிகளால் எழுவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதன்போது 310 மில்லி கிராம் ஹெரோய்னை வைத்திருந்த சந்தேக நபர் ஹட்டன், பண்டாரநாயக்கபுர பகுதியைச் சேர்ந்த 28 வயதானவர் என கலால் அலுவலக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஏனைய ஆறு சந்தேகநபர்களிடம் இருந்தும் கஞ்சா கைப்பற்றப்பட்டதாகவும் குறித்த அறுவரும் போதைப் பொருளுக்கு அடிமையான 25- 30 வயதுக்கு இடைப்பட்டவர்கள் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட அறுவரும் குடாகம, பண்டாரநாயக்கபுர ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்றும் கைது செய்யப்பட்ட ஏழு பேரும் ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர் என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர்.

# மானியங்களில் நியாயம் வேண்டும்; மானியக் கலாசாரம் ஒழிய வேண்டும்

திருவிழாக்காலங்களில் வழங்கப்படும் அன்னதானம், பூரணை தினங்களில் வழங்கப்படும் தானசாலைகள், ஏனைய தான தர்மங்களில் போது, மக்கள் முண்டியடித்துக்கொண்டு வரிசையில் கால்கடுக்க காத்திருப்பர். ஒரு பிடியேனும் வாங்கி உண்டுவிடவேண்டும்; அப்போதுதான் புண்ணியம் கிடைக்குமென வரிசையில் நிற்போர் கூறுவதை கேள்விப்பட்டிருக்கின்றோம்.

அவ்வாறான வரிசைகளில், ஏழை, எளியவர்கள், செல்வந்தர்கள், யாசகர்கள் எனும் வித்தியாசங்கள் இருக்காது. அனைவரும் வரிசையில் நின்றே ஆகவேண்டும். அதுபோன்ற வரிசைகளையே மக்கள் இன்னும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். அந்தளவுக்கு நொடிக்கு, நொடி பொருளாதார சுமை எகிறிக் கொண்டே செல்கின்றது.

புதிய அரசாங்கத்தின் இடைக்கால வரவு-செலவுத் திட்டத்தில், பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 'வற்' மூன்று சதவீதத்தால் (15%) அதிகரிக்கப்பட்டு உள்ளமையால், பொருட்களின் விலைகளும் சேவைகளின் கட்டணங்களும் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. ஆக, மானியங்கள் வழங்கப்பட வேண்டிய கட்டாயத்துக்குள், அரசாங்கம் தள்ளப்பட்டுள்ளது.

மானியங்களை வழங்குவதன் முதன்மை நோக்கம், பொருளாதாரத்தை ஊக்குவிப்பதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு நடவடிக்கையையும் ஊக்குவிப்பதன் மூலம், பொருளாதாரத்தைத் தூண்டும் எனற நம்பிக்கையுடன் மானியங்கள் வழங்கப்படுகின்றன. பொதுவாக, உலக நாடுகளின் அரசாங்கங்கள், ஐந்து துறைகளின் செயற்பாடுகளை மேம்படுத்த மானியம் தருகின்றன. ஏற்றுமதி, விவசாயம், எரிபொருள், வீடு, சுகாதாரம் ஆகியவையே அவையாகும். இந்த ஐந்து துறைகளுக்கும், பொது அல்லது தனியார் நிறுவனங்களுக்கு அல்லது அரசாங்கத்துக்கு வழங்கப்படும் நிதிச் சலுகைகள் மானியங்கள் ஆகும்.

மானியங்கள் நேரடி மற்றும் மறைமுக வடிவில் வழங்கப்படுகின்றன. வரிச் சலுகைகள், குறைந்த வட்டி, வீட்டுக் கடன்கள் என்பன மானியங்களுக்குள் உள்ளடங்குகின்றன.

எமது நாட்டை பொறுத்தவரையில், சுதந்திரம் அடைந்ததில் இருந்து, மானியம் கேட்டு, கொடுக்கும் கலாசாரத்துக்கு நாம் பழகிவிட்டோம். வாக்காளர்கள் மானியங்களுக்கு வாக்களித்தனர்; அரசியல்வாதிகள் மானியங்களை வழங்குவதாக தேர்தல் வாக்குறுதிகளை அளித்தனர்.

மானியங்கள் வழங்குவது பயனுள்ளதாக இருக்க வேண்டுமானால், தேர்ந்தெடுக்கப்பட்ட நடவடிக்கைகளுக்கு, தேர்ந்தெடுக்கப்பட்ட நபர்களுக்கு மானியங்கள் வழங்கப்பட வேண்டும். ஆனால், பொதுவாக வாக்குகளைப் பெறுவதற்காக, தேர்தல் வாக்குறுதிகள் மூலம், தகுதியிழந்தவர்களுக்கும் மானியங்கள் வழங்கப்பட்டன.

மானியங்கள் வழங்கப்பட்டதன் பின்னரான விலை அதிகரிப்புகள் யாவும், சகலரையும் பாதித்துக்கொண்டிருக்கின்றன. யாருக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்ற வரையறையை விதிக்க முடியாதுள்ளது. அத்தனை பிரிவினரும் வரையறையைக் கடந்தே நிற்கின்றனர்.

முறையான செயற்பாடுகளுக்கு மானியம் வழங்க வேண்டும்; வரிச் சலுகைகளையும் வழங்க வேண்டும். மானியக் கலாசாரம் இப்போதே ஒழிய வேண்டும். மானியங்கள் நியாயமாக வழங்கப்பட வேண்டுமே தவிர, அரசியல் இலாபத்துக்காக அல்ல என்பதை வலியுறுத்துகின்றோம்.


தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




## வாழ்வியல் தரிசனம்

கசப்பானவை எல்லாம் வெறுப்பானவை அல்ல; நோய் வந்தால், உட்கொள்ளும் மருந்துகள் கிருமிகளை அகற்றும். பாவற்காய் போன்றவை கசப்பானவை; ஆனால், அவைகளை நாங்கள், புறக்கணிக்க முடியுமா?

அநேகருக்கு நல்லவற்றைச் சொன்னால், கோபத்துடன் வெறுப்பும் வந்துவிடுகின்றது. குற்றங்களைச் செய்பவர்களுக்கு, தண்டனை வழங்குவது தகாத விடயமல்ல. பெற்றோர், ஆசிரியர் ஆகியோர், கல்வி, ஒழுக்கம் போன்ற விடயங்களில் கண்டிப்பது, நல்ல பலனை அளிக்கும் அல்லவா?

கஷ்டநஷ்டங்களே ஒருவரது வாழ்க்கையில் மாற்றங்களை ஏற்படுத்துகின்றன. 'நான் முன்னேறியே தீருவேன்' எனும் முயற்சி, கஷ்டப்படுபவர்களுக்கு ஊக்கம் அளிக்கின்றது.

படுத்தபடி காலத்தைக் கடத்தினால், எழுவது எப்போது? இலவசமாக எதுவும் கிடைக்கும் என எதிர்பார்த்தலாகாது. முரணான வாழ்க்கை முறையே, பல குடும்பங்களின் நிம்மதியை உடைத்துவிடுகின்றது. பழைமையில் இருந்து, புது உலகத்துடன் இணையும் போது, தவறான பாதையில் செல்லக்கூடாது.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

பயங்கரவாத தடுப்புச் சட்டத்துக்கு எதிரான

# தென்இலங்கையின் விழிப்பு




என். கே அஷோக்பரன்
Twitter:@nkashokbharan


(கடந்த வாரத் தொடர்ச்சி)

பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் அபாயம் என்பது, வெறுமனே ஒரு நபரை நீண்டகாலத்துக்கு, நீதிமன்றில் ஆஜர்படுத்த வேண்டிய அவசியமின்றி, தடுத்து வைக்கக்கூடிய அதிகாரத்தை, நிர்வாகத்துறையிடம் வழங்குவது என்பதோடு சுருங்கிவிடவில்லை.

மாறாக, சான்றுக் கட்டளைச் சட்டம் வழங்குகிற மிக முக்கியமான பாதுகாப்புகளுள் ஒன்றையும், பயங்கரவாத தடுப்புச் சட்டம் மறுக்கும் வகையில் அமைகிறது என்பது, மிகவும் பிரச்சினைக்குரிய விடயமாகும்.

குற்றவியல் சட்டத்தின் அடிப்படையாக இருப்பது, 'குற்றமற்றவர் என்ற எடுகோளாகும்'. அதாவது, எந்தவொரு குற்றத்திலும், குற்றம் சாட்டப்பட்ட ஒவ்வொரு நபரும், குற்றவாளி என்று நிரூபிக்கப்படும் வரை, நிரபராதி என்று கருதப்படுவார்கள்.

ஆகவே, குற்றம்சாட்டுவோர், அதனை சந்தேகத்திற்கப்பால் நிரூபிக்க வேண்டிய கடப்பாடு உடையவர்களாக இருக்கிறார்கள். அவ்வாறு நிரூபிக்கும்போதுதான், ஒருவர் குற்றவாளியாகக் காணப்படுவார்.

இலங்கையின் சான்றுக் கட்டளைச் சட்டமானது, பிரித்தானியரால் இலங்கைக்கு வழங்கப்பட்ட முக்கிய சட்டங்களுள் குறிப்பிடத்தக்கதாகும். இன்றுவரை, சில புதிய சேர்க்கைகளுடனும் மாற்றங்களுடனும் ஆனால், அடிப்படைகளில் மாற்றமின்றி, சான்றுக் கட்டளைச் சட்டம் நடைமுறையில் இருக்கிறது.

இந்தச் சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 25(1) சரத்தானது, 'நபரொருவர் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு வழங்கிய ஒப்புதல் வாக்குமூலமொன்றை, அந்நபருக்கு எதிராகப் பயன்படுத்த முடியாது' என்றும், 26ஆம் சரத்தானது, 'பொலிஸாரின் காவலில் உள்ள நபரொருவர், நீதிவானின் முன்னிலையில் அன்றி, பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு வழங்கிய ஒப்புதல் வாக்குமூலமொன்றை அந்நபருக்கு எதிராகப் பயன்படுத்த முடியாது' என்றும் வழங்குகிறது.

இதன் சுருக்கம், நபரொருவர் பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு வழங்கிய ஒப்புதல் வாக்குமூலத்தைப் பயன்படுத்தி, அவருக்கெதிரான குற்றச்சாட்டை நிரூபிக்க முடியாது. ஒப்புதல் வாக்குமூலமானது, நீதிவானின் முன்பு வழங்கப்படின் மட்டுமே, அதனை வழங்கிய நபருக்கு எதிராகப் பயன்படுத்த முடியும்.

பொலிஸார் முறையற்ற வழிகளில், ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெறுவதற்கான வாய்ப்புகள் அதிகம்; அதனைப் பயன்படுத்தி, அந்த ஒப்புதல் வாக்குமூலம் அளித்தவரைக் குற்றவாளியாகக் காண்பது பாதுகாப்பானதல்ல என்பது, சான்றுக் கட்டளைச் சட்டத்தின், இந்த ஏற்பாடுகளுக்கான முக்கிய காரணங்களில் ஒன்றாகும்.

பயங்கரவாத தடுப்புச் சட்டமானது, சான்றுக் கட்டளைச் சட்டத்தின் இந்த ஏற்பாடுகளுக்கும், விதிவிலக்கை ஏற்படுத்தியது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் 17ஆம் சரத்து, சான்றுக் கட்டளைச் சட்டத்தின் 25, 26, 30ஆவது சரத்துகள் பயங்கரவாத தடுப்புச் சட்டம் பற்றிய விடயங்களில் செல்லுபடியாகாது என்று வழங்குவதுடன், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் 16ஆம் சரத்தானது, உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அல்லது, அதற்கு மேற்பட்ட தரமுடைய ஒரு பொலிஸ் அதிகாரியிடம், நபரொருவர் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலம் செல்லுபடியாகும் என்ற வகையிலான ஏற்பாட்டை வழங்குகிறது.

இதையொத்த ஏற்பாடொன்று, அவசரகால சட்ட ஒழுங்குகளின் கீழும் பொதுவாகக் காணப்படுகிறது. ஆகவே, பயங்கரவாத தடைச் சட்டம், அவசரகால சட்டம் ஆகியவற்றின் ஒழுங்குகளின் கீழ், நபரொருவர், உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அல்லது அதற்கு மேற்பட்ட தரமுடைய பொலிஸ் அதிகாரி ஒருவருக்கு வழங்கிய ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில், குற்றவாளியாகக் காண முடியும். மேலும், குறித்த ஒப்புதல் வாக்குமூலமானது ஏதேனும் தூண்டுதல், அச்சுறுத்தல், வாக்குறுதியின் அடிப்படையில் வழங்கப்பட்டதெனில், பொதுவாகச் சான்று கட்டளைச் சட்டத்தின் 24ஆம் சரத்தின் கீழ், அத்தகைய ரீதியில் பெறப்பட்ட ஒப்புதல் வாக்குமூலம் செல்லுபடியாகாது.

பயங்கரவாத தடுப்புச் சட்டமானது, குறித்த ஒப்புதல் வாக்குமூலமானது தூண்டுதல் அல்லது அச்சுறுத்தல் அல்லது வாக்குறுதியின்படி பெறப்பட்டது என்பதை நிரூபிக்கும் பொறுப்பை, குறித்த நபரிடம் சாற்றுகிறது. ஆகவே, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ், குறித்த ஒப்புதல் வாக்குமூலமானது, தூண்டுதல், அச்சுறுத்தல், வாக்குறுதியின் படி பெறப்படவில்லை என நிரூபிக்கும் பொறுப்பு பொலிஸாருக்கில்லை. இது, மிக மிக ஆபத்தானது.

ஒட்டுமொத்தமாக, மாதக்கணக்கில் நீதித்துறையின் மேற்பார்வை, பாதுகாப்பு ஏதுமின்றி தடுத்துவைக்கப்பட்ட ஒரு நபர், பொலிஸாரிடம் வழங்கிய ஒப்புதல் வாக்குமூலமானது செல்லுபடியாகும் என்ற எடுகோளை, பயங்கரவாத தடுப்புச் சட்டம் தாபிக்கிறது. அத்துடன், தூண்டுதல், அச்சுறுத்தல், வாக்குறுதியின் அடிப்படையில் பெறப்பட்ட வாக்குமூலம் என்பதை நிரூபிக்க வேண்டிய கடப்பாடு, தடுப்பில் வைத்திருக்கப்பட்டு, பொலிஸாரிடம் ஒப்புதல் வாக்குமூலம் வழங்கியதாக, சொன்ன அந்த நபர் மீது திணிக்கப்பட்டுள்ளது. இந்த நிலையில், அதனை நிரூபித்தல் என்பது, சாத்தியம் மிகக்குறைந்த காரியம் என்பதற்கு வரலாறும், வழக்குகளுமே சாட்சி.

மிகக் கொடுமையான சட்டங்களைச் சுட்டிக்காட்ட, ஆங்கிலத்தின் 'ட்ரேகோனியன் லோ' (Draconian Law) என்ற சொற்றொடரைப் பயன்படுத்தப்படுவது வழமை. கிரேக்கத்தில் வாழ்ந்த 'ட்ரேகோ' என்ற நபர், எதென்ஸ் நகரின் சட்டங்களைக் கோவைப்படுத்தப் பணிக்கப்பட்டார். வழக்கத்தில் மட்டுமிருந்த பழைய சட்டங்களை எல்லாம் அவர் கோவைப்படுத்தியதில், மிகச் சிறு குற்றங்களுக்கு எல்லாம் கடும் தண்டனையான மரணதண்டனை விதிக்கப்பட்டது.

உதாரணமாக, ஓர் அப்பிளைத் திருடியவனுக்கும் மரண தண்டனை என்றவாறு அமைந்தது. அவர் கோவைப்படுத்திய சட்டங்கள் மிகக் கடுமையாக, கொடுமையாக இருந்ததால், அதனை 'இரத்தத்தில் எழுதிய சட்டங்கள்' என்று குறிப்பிடுவதுமுண்டு. ஆகவே, கொடுமையான சட்டங்களை 'ட்ரேகோனியன்' சட்டங்கள் என விளிக்கும் வழக்கம் ஏற்பட்டது.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டமானது, சர்வ நிச்சயமாக 'ட்ரேகோனியன்' சட்டம் தான். அதனால்தான், கால தசாப்தங்களாகவே, சர்வதேச மன்னிப்புச் சபை உள்ளிட்ட பல சர்வதேச அமைப்புகளும் உள்நாட்டு, வெளிநாட்டுச் சிவில் ஆர்வலர்களும் புத்திசீவிகளும் இந்தக் கொடுமையான, பயங்கரவாதத் தடுப்புச் சட்டம், இல்லாதொழிக்கப்பட வேண்டும் என்று குரல் கொடுத்து வருகின்றனர்.

ஆனால், எந்நபரையும் நீதிமன்றின் தலையீடின்றியே பலகாலம் தடுத்து வைக்கக்கூடிய பெரும்பலத்தைத் தரும் இச்சட்டத்தை, இல்லாதொழிக்கும் விருப்பம், இதுவரை எந்த அரசாங்கத்துக்கும் ஏற்படவில்லை என்பதுதான் உண்மை.

இந்தப் பயங்கரவாத தடுப்புச் சட்டம், தமிழ் மக்களின் போராட்டத்தை ஒடுக்கக் கொண்டுவரப்பட்ட சட்டம் என்பதில் மாற்றுக்கருத்துகள் இருக்க முடியாது. பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கோரப்பிடியில் அதிகமாகச் சிக்கியதும் தமிழ் மக்களே! குறிப்பாக, தமிழ் இளைஞர்கள் ஆவார்.

இந்தப் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தில் குறிப்பிடத்தக்க இன்னோர் அம்சம் உண்டு. அதாவது, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்பட்ட நபரொருவருக்கு, குற்றவியல் சட்டத்தின் கீழ் மரண தண்டனைதான் வழங்கப்பட வேண்டுமெனினும், அவருக்கு ஆயுள் தண்டனையே பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் என்று பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் மூன்றாம் சரத்து குறிப்பிடுகிறது.

அதாவது, பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ், எத்தகைய பாரிய குற்றத்துக்கும் மரண தண்டனை கிடையாது; உச்சபட்ச தண்டனை ஆயுள் தண்டனையாகும். இதன் கீழ் தண்டனை பெறும் யாரும், அரசியல் ரீதியாகத் 'தியாகி'களாகக் காணப்பட்டு விடக்கூடாது என்பதே, இந்த ஏற்பாட்டுக்குக் காரணமாக இருக்கலாம் என, சர்வதேச மன்னிப்புச் சபையின் சர்வதேச நிறைவேற்றுக் குழுவின் தவிசாளராக இருந்த சூரிய விக்கிரமசிங்க, தன்னுடைய கட்டுரையொன்றில் குறிப்பிடுகிறார்.

தமிழ் மக்களைத் தாண்டி, ஜே.வி.பி. ஆயுதக் கிளர்ச்சியின் போதும் (1988-1989) பயங்கரவாத தடுப்புச் சட்டம் பயன்படுத்தப்பட்டது. இந்த இரண்டு தரப்பும், இலங்கையின் அந்தந்தந்த காலத்தில் பெரும்பான்மை மக்கள் வெறுக்கும் தரப்புகளாகவே இருந்தமையால், இந்தக் கொடூரச் சட்டத்துக்கு எதிரான குரல்கள் எழவேயில்லை. மாறாக, இதன் அவசியத்தன்மை பற்றிய அரசாங்கத்தின் நியாயப்பாடுகளாகச் சொல்லப்பட்டவை, பெரும்பான்மை மக்களால் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

இன்று, 2022இல், கோட்டாபய ராஜபக்ஷ மக்கள் எழுச்சிக்கு பயந்து, ஜனாதிபதி பதவியிலிருந்து விலகியதைத் தொடர்ந்து, அவசரகாலச் சட்டம், பயங்கரவாத தடுப்புச் சட்டம் பற்றிய உண்மையானதொரு புரிதல், தென்இலங்கையில் ஏற்படுவதை அவதானிக்கக் கூடியதாகவுள்ளது.

இந்த விழிப்பு, ஏறத்தாழ 42 வருடங்கள் கடந்தாவது ஏற்பட்டிருப்பது நல்லதுதான். இந்த விழிப்பு, இந்த 'ட்ரேகோனியன்' சட்டங்கள் இல்லாது ஒழிக்கபடுவதை உறுதிப்படுத்துமா என்பதை காலம்தான் சொல்லும்!

## கடிதங்கள்

### எரிபொருள் வழங்கப்படாமையால் பெரும்போக பயிர் செய்கையில் இழுபறி

பெரும்போக பயிர்ச்செய்கை ஆரம்பிக்கப்பட உள்ள நிலையில், நிலத்தைப் பண்படுத்துவதற்கான எரிபொருள் கிடைக்கப்பெறாமல், பல விவசாயிகள் பெரும்போக பயிர்ச் செய்கையை மேற்கொள்வதில் ஆர்வம் காட்டவில்லை.

கிளிநொச்சி மாவட்டத்தில், சிறுபோகம் முடியும் நிலையில், பெரும்போகத்துக்காக நிலத்தைப் பண்படுத்துவதற்கான எரிபொருள் கிடைக்கப் பெறாமையால், பல விவசாயிகள், பெரும்போக பயிர்ச் செய்கையை மேற்கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்கொள்வதாக தெரிவித்துள்ளனர்.

சிலர், தமது மாடுகளைக் பயன்படுத்தி, நிலத்தைப் பண்படுத்துவதாகவும் அனேகர், இயந்திர வாழ்கையை நம்பி, ஏமாற்றம் அடைந்ததே மிகுதி எனவும் முன்னைய காலம் போன்று, அனைவரும் வீட்டுக்கு ஒரு சோடி மாட்டை வளர்த்தால் மட்டுமே, வருங்காலத்தில் விவசாயம் மேற்கொள்ளக் கூடிய நிலை ஏற்படும் எனவும் விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், இயந்திரங்களின் வருகையை அடுத்து, மாடுகளை பயன்படுத்தாமல், அதனை பலர் அழிவடைய விட்டுவிட்டனர். எனவே, சம்பந்தப்பட்ட அதிகாரிகள், தற்பொழுது நாட்டு நிலைமையை கருத்தில் கொண்டு, விவசாயிகள் ஆகிய எமக்கு, உரிய நேரத்தில் எரிபொருள், யூரியா உரம் ஆகியவற்றைத் தந்து, நாட்டில் ஏற்பட்டுள்ள அரிசி தட்டுப்பாடு நீக்குவதற்கு, நாம் உதவுவதற்கு வழிஏற்படுத்தித் தருமாறு விவசாயிகள் கேட்டுக்கொள்கின்றார்கள்.

யது பாஸ்கரன்

தொழில்களுக்கு ஏற்ற சூழலை உருவாக்குவதன்

# அவசியத்தை ‘வீ-கனெக்ட்’ அமைப்பு வலியுறுத்தல்

‘வீ-கனெக்ட்’ சர்வதேச கூட்டமைப்பு, முதலீட்டுக்கு தயார் சூழல், வணிகம் தொடர்வதற்கான பயிற்சி, பொருள் விநியோகம், அனைவரையும் ஒருங்கிணைக்கும் வட்ட மேசை - தொழில் நிறுவனங்களை இணைக்கும் 100க்கும் மேலான இலங்கை பெண் தொழிலதிபர்களை இணைக்கும் நிகழ்வை நடத்தியுள்ளது.

இந்தச் சிறப்பு நிகழ்வானது, மகளிரை பொருளாதார ரீதியில் சுதந்திரமானவர்களாக மேம்படுத்தும் திட்டமாகும். இத்திட்டமானது, அமெரிக்க வெளியுறவுத்துறையின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகார பிரிவு வழங்கிய நிதி மூலம் செயற்படுத்தப்படுகிறது. இலங்கைக்கான அமெரிக்க தூதர் ஜூலி சுங், இந்நிகழ்வில் தலைமை உரை நிகழ்த்தினார். இதில், பெண் தொழிலதிபர்கள், உள்ளூர் மற்றும் பன்னாட்டு நிறுவன பிரதிநிதிகளும் பங்கேற்றனர்.

“இலங்கையில் ‘வீ கனெக்ட்’ சர்வதேச அமைப்பு மேற்கொள்ளும் திட்டப் பணிகளுக்கு, அமெரிக்க அரசு தாராளமாக, மனம் உவந்து நிதி அளிக்கிறது” என்று, இலங்கைக்கான அமெரிக்க தூதர் சுங் குறிப்பிட்டார். “ஆண்கள் தொழில் தொடங்கி செயற்படுவதைப் போன்றே, பெண்களும் தொழிலதிபர்களாக மாறவேண்டும் என, இந்தக் கூட்டமைப்பு இலக்கு நிர்ணயித்து, அதற்குரிய சூழல் மற்றும் ஸ்திரமான வளர்ச்சி வாய்ப்புகளை பெண் சமூகம் மத்தியில் இந்நாட்டில் உருவாக்கி செயற்படுத்துவது - கவனத்தை ஈர்ப்பதாக உள்ளது” என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

தற்போது இலங்கையில் நிலவும் பொருளாதார மற்றும்



அரசியல் காரணங்களால் மகளிர் நடத்தும் தொழில்கள், எந்த அளவுக்கு பாதிக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து, அவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு அளிக்கும் விதமாகவும் அவர்களுக்கு உதவும் நோக்கிலும், இந்த நிகழ்வு அவசர கதியில் நடத்தப்படுகிறது.

மகளிரின் திறன் மேம்பாடு பயிற்சியில், பொருள் விலை நிர்ணய உத்தி மூலம் தொடர்ந்து தொழிலில் நிலைத்து நிற்பது மற்றும் நிதி நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்தி, அவர்களுக்கு குறைந்த வட்டியில் கடன் கிடைக்கச் செய்வது, டிஜிட்டல் சந்தை வாய்ப்பு மூலம் உள்ளூர் மற்றும் பிராந்திய வர்த்தகத்துக்கு வழி ஏற்படுத்தவது ஆகியவற்றுடன் ‘வீ கனெக்ட்’ சர்வதேச கூட்டமைப்பின் தொடர்பு மூலம், இந்தியா உள்ளிட்ட பிறநாடுகளில் உள்ள மகளிர் தொழிலதிபர்களுடன் இணைப்பை ஏற்படுத்துவது உள்ளிட்டவை அடங்கும்.

இந்நிகழ்வில், பல்வேறு தொழில்களில் ஈடுபடும் பெண் தொழிலதிபர்கள் குறிப்பாக சேவைத்துறை, உற்பத்தித் துறை, தகவல் தொழில்நுட்பம், வேளாண்துறையைச் சேர்ந்தவர்களும் பங்கேற்றனர்.

இவர்கள் அனைவரும் உள்ளூர் நிறுவனங்களுடன் இணைந்து, அவர்களது தொழிலுக்கான வாய்ப்புகளை உருவாக்குவதும் இந்நிகழ்வின் முக்கிய நோக்கமாகும். கலந்துரையாடல் மூலம் தங்களது தயாரிப்புகளுக்கான சந்தை வாய்ப்புகளை அறிவதோடு, தயாரிப்புகளை வாங்கும் நிறுவனங்களை கண்டறியவும் இந்நிகழ்வு ஒருவாய்ப்பாக அமைந்தது. பெண் தொழிலதிபர்களும் இணைந்து கூட்டாக ஒருங்கிணைப்பை உருவாக்கி, அதன் மூலம் புதிய தொழில்வாய்ப்புகளைக் கண்டறியவும் இது வாய்ப்பை உருவாக்கித் தந்துள்ளது.

பொருள் விநியோகம், அனைவருக்குமான ஒருங்கிணைப்பு வட்டமேசை நிகழ்வில் 30க்கும் மேற்பட்ட நிறுவன பிரதிநிதிகள் பெண் தொழிலதிபர்களிடமிருந்து பொருட்களை வாங்குவதற்கான வாய்ப்பை உருவாக்கியுள்ளது. இந்நிகழ்வில், பெண் தொழில் அதிபர்கள் குறிப்பாக, ‘ஐட்கென் ஸ்பென்சஸ்’, ‘ஹார்லேஸ்’, ‘சிலோன் பிஸ்கெட்ஸ் லிமிடெட்’, ‘கொமர்ஷியல் வங்கி’, ‘ஹெச்என்பி’, ‘மலிபன்’ உள்ளிட்ட நிறுவன பிரதிநிதிகள் பங்கேற்றனர்.

யூனியன் அஷ்யூரன்ஸ் Clicklife App டிஜிட்டல்

# வெகுமதிகள் விரிவாக்கம்

யூனியன் அஷ்யூரன்ஸ் அறிமுகம் செய்திருந்த புத்தாக்கமான அம்சங்கள், புதிய தலைமுறை உள்ளம்சங்களைக் கொண்ட காப்புறுதி *app* ஆன *Clicklife* இனால், நாடு முழுவதிலும் வாழ்க்கைமுறைகள் மாற்றியமைக்கப்பட்ட வண்ணமுள்ளதுடன், காப்புறுதி அனுபவமும் மேம்படுத்தப்பட்ட வண்ணமுள்ளது. வாடிக்கையாளர்களுக்கு வலுவூட்டும் வகையில் பிரத்தியேகமான அனுகூலங்களை வழங்கும் வகையில், விசேடமாக வடிவமைக்கப்பட்டுள்ள *Clicklife App*, யூனியன் அஷ்யூரன்ஸ் நிறுவனத்தின் பரந்தளவு டிஜிட்டல் நோக்கத்தின் அங்கமாக அமைந்திருப்பதுடன், பாரம்பரிய ஆயுள் காப்புறுதியை மாற்றியமைப்பதாக அமைந்துள்ளது.

*‘Clicklife ecosystem’* இனால், பரிபூரண வாழ்க்கைமுறை கட்டமைப்பு வழங்கப்படுவதுடன், பாவனையாளர்களுக்கு தமது ஆரோக்கியம், நிதி நிலையை சிறப்பாக பேணுவதற்கு ஆதரவு வழங்கப்படுகின்றது. *Clicklife App* ஊடாக, பாவனையாளர்களுக்கு நவீன உள்ளம்சங்களான *Thyaga* எனும் இலங்கையின் பல்நோக்கு அன்பளிப்பு வவுச்சர் கட்டமைப்பை அணுகும் வசதி வழங்கப்படுகின்றது.

முழுமையாக டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட கட்டமைப்பினூடாக ஒப்பற்ற அனுபவம் வழங்கப்படுகின்றது. *Clicklife App* இன் உள்ளம்சங்களுடன் ஈடுபாட்டை பேணுகின்றமைக்காக வழங்கப்படும் ‘லோயல்டி’ புள்ளிகளை சேகரித்து, புதிதாக அறிமுகம் செய்யப்பட்டுள்ள டிஜிட்டல் வவுச்சர்களினூடாக மீளப் பெற்றுக் கொள்ள முடியும். இந்த டிஜிட்டல் வவுச்சர்களை 85 க்கும் அதிகமான விற்பனைப் பங்காளர் பகுதிகளில் பயன்படுத்த முடியும். இவற்றில் சுப்பர்மார்கெட்கள், பாமசிகள், உணவகங்கள், ஆடை விற்பனையகங்கள்




போன்றன அடங்கியுள்ளன. பங்காளர் வலையமைப்பைச் சேர்ந்த நிறுவனங்களிடமிருந்து வாடிக்கையாளர்கள் விசேட விலைக்கழிவுகள், சலுகைகளைப் பெற்றுக் கொள்வார்கள். *App* ஊடாக ‘ப்ரீமியம்’ கொடுப்பனவுகளை மேற்கொள்வது, உலக சுகாதார ஸ்தாபனத்தால் பரிந்துரைக்கப்பட்ட வாராந்தம் 150 நிமிடங்கள் உடல் செயற்றிறனுடன் இருப்பது எனும் உடல் தகைமை இலக்கை பூர்த்தி செய்வது, மாதாந்த சவால்களில் பங்கேற்பது போன்றவற்றினூடாக புள்ளிகளை சேகரித்துக் கொள்ள முடியும். மேலும், வாடிக்கையாளர்களால் மைல்கற்கள் எய்தப்படும் போது விசேட அன்பளிப்புகளும் வழங்கப்படுகின்றன.

ஜோன் கீல்ஸ் X (JKX) திறந்த புத்தாக்க நிகழ்ச்சித்திட்டத்தினூடாக *Thyaga* உடனான பங்காண்மை ஏற்படுத்தப்பட்டிருந்ததுடன், இதனை யூனியன் அஷ்யூரன்ஸின் தாய் நிறுவனமான, ஜோன் கீல்ஸ் குழுமம் ஏற்பாடு செய்திருந்தது. திறந்த புத்தாக்கத்துகு ஆதரவளிப்பதற்கும், நிதித்தொழில்நுட்ப கட்டமைப்பை இலங்கையில் கட்டியெழுப்பவும் யூனியன் அஷ்யூரன்ஸ் தன்னை அர்ப்பணித்துள்ளது. *JKX* திறந்த புத்தாக்க நிகழ்ச்சித்திட்டத்தினூடாக, ஆரம்பநிலை நிறுவனங்களுக்கு ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் கட்டமைப்பின் அனுகூலத்தைப் பெற்றுக் கொள்ள முடியும். இதில் யூனியன் அஷ்யூரன்சும் அடங்கியுள்ளது. திறந்த புத்தாக்கத்தை கட்டியெழுப்பும் சர்வதேச கட்டமைப்பை கட்டியெழுப்புவது இதன் இலக்காகும்.

*Clicklife App* இனால் காப்புறுதிக் கட்டமைப்பில் புரட்சிகரமான மாற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதுடன், வாடிக்கையாளர்களுக்கு தமது மொபைல் தொலைபேசிகளினூடாக எங்கிருந்தும், எந்நேரத்திலும் காப்புறுதியை பெற்றுக் கொள்ள முடியும். எவ்விதமான சிக்கல்களுமின்றி, கடதாசி பாவனையுமின்றி, சுய பராமரிப்பு *App* இனை பயன்படுத்தி, நபர் ஒருவர் தமது காப்புறுதி தேவைகளை நிவர்த்தி செய்து கொள்ளலாம். தவணைக் கட்டணங்கள் செலுத்த முடியும்; காப்புறுதியுடன் தொடர்புடைய ஆவணங்களை தரவிறக்கம் செய்யலாம்; காப்புறுதித் தகவல்களை ஒரு ‘க்ளிக்’கில் பார்வையிட முடியும்.

நபர் ஒருவர், தமது வீட்டில் சௌகரியமாக இருந்தவாறு, காப்புறுதி ஆவணங்கள், உரிமைகோரல் படிவங்களை சமர்ப்பிக்க முடியும். மருத்துவ சிகிச்சையை பொறுத்தமட்டில், *App* இனால் பணமில்லாத வைத்தியசாலை அனுமதி முதல் வைத்திய நிபுணர்களை ‘செனல்’ செய்வது வரை இலகுவாக மற்றும் சௌகரியமாக மேற்கொள்ளும் வசதி வழங்கப்படுகின்றது.

உடுப்பி


21 சிறுவர்களை மிரட்டி ஓரினச்சேர்க்கை

# பத்திரிகையாளருக்கு 13 ஆண்டுகள் சிறை

சிறுவர்களை மிரட்டி ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்ட பத்திரிகையாளருக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட இரண்டு வழக்குகளில், அவரை குற்றவாளியாக இனங்கண்ட நீதிமன்றம், அவருக்கு 13 ஆண்டுகள் சிறைத் தண்டனை விதித்து, போக்சோ விரைவு நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

பாடசாலை சிறுவர்களை ஆசை வார்த்தை கூறி, வனப்பகுதிகளுக்கு அழைத்து சென்று, ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டிருந்தார். மேலும் அதனை, அலைபேசியில் வீடியோவாகப் பதிவு செய்து, மிரட்டி, அந்தச் சிறுவர்களுடன் அவர் மீண்டும் மீண்டும் ஓரினச்சேர்க்கையில் ஈடுபட்டு வந்துள்ளார்.

இந்தச் சம்பவம் 2018ஆம் ஆண்டு 28ஆம்



திகதி இடம்பெற்றுள்ளது. அந்தச் பத்திரிகையாளர் 21 சிறுவர்களை வலுக்கட்டாயமாக ஓரினச்சேர்க்கையில் ஈடுபடுத்தியது தெரியவந்தது. இதுதொடர்பில் பைந்துார் பொலிஸில் 16 வழக்குகளும், கங்கொல்லி பொலிஸில் 3 வழக்குகளும் குந்தாபுரா புறநகர் மற்றும் கொல்லூர் பொலிஸில் தலா ஒரு வழக்கும் பதிவாகி இருந்தன. இதுதொடர்பான வழக்குகள் உடுப்பி மாவட்ட கூடுதல் நீதிமன்றம் மற்றும் போக்சோ விரைவு நீதிமன்றம் ஆகியவற்றில் நடைபெற்று வருகின்றன. இதுவரை 11 வழக்குகளில் தீர்ப்பு கூறப்பட்டுள்ளது. இதில் 8 வழக்குகளில் அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்படவில்லை எனக் கூறி விடுதலை செய்யப்பட்டார்.

இந்த நிலையில் அவருக்கு எதிரான 2 வழக்குகளில், நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பை வழங்கியுள்ளது. அதாவது, ஒரு வழக்கில் அவருக்கு 10 ஆண்டுகள் சிறை தண்டனையும், ரூ.1,000 அபராதமும், மற்றொரு வழக்கில் 3 ஆண்டுகள் கடுங்காவல் சிறை தண்டனையும் ரூ.1,000 அபராதமும் விதிக்கப்பட்டுள்ளது.

போபால்

## புத்தகப் பை இல்லா நாள்



பாடசாலை மாணவர்களின் புத்தகப் பை சுமையைக் குறைக்கும் வகையில், வாரம் ஒரு நாள் புத்தகப் பை இல்லாத நாளாக கடைப்பிடிக்க மத்திய பிரதேச அரசாங்கம் முடிவு செய்துள்ளது. இதற்கான வழிகாட்டுதல் வெளியிடப்பட்டுள்ளது.

தேசிய கல்விக் கொள்கையின் அடிப்படையில், மத்திய பிரதேச அரசாங்கம், இந்தத் திட்டத்தை தழுவியுள்ளது. இது மாநிலத்தில் உள்ள அனைத்து அரசு மற்றும் தனியார் பாடசாலைகளுக்கும் பொருந்தும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதன்படி 1, 2ஆம் வகுப்பு மாணவர்களின் புத்தகப் பை 1.6 முதல் 2.2 கிலோ கிராம் வரையிலான நிறையில் இருக்க வேண்டும். 3 முதல் 5ஆம் வகுப்பு மாணவர்களின் புத்தகப் பையின் நிறை 1.7 முதல் 2.5 கிலோ கிராம் வரை இருக்கலாம். 6, 7ஆம் வகுப்பு மாணவர்களின் புத்தகப் பை 2 கிலோ கிராம் முதல் 3 கிலோ கிராம் வரை இருக்கலாம். எட்டாம் வகுப்பு மாணவர்களின் புத்தகப் பை 2.5 கிலோ கிராம் முதல் 4.5 கிலோ கிராம் வரை இருக்கலாம். 9, 10 ஆம் வகுப்பு மாணவர்களின் பை 2.5 கிலோ கிராம் முதல் 4.5 கிலோ கிராம் வரை இருக்கலாம்.

இந்நிலையில், உயர்நிலைப் பள்ளியில் 11, 12ஆம் வகுப்பு மாணவர்களின் புத்தகப் பையின் எடை, அந்தந்தப் பாடசாலையின் நிர்வாகத்தால், மாணவர்கள் தேர்வு செய்யும் பாடப்பிரிவை பொறுத்து அமையும்.

இதுதவிர பயிற்சி புத்தகங்கள், கையெழுத்து பயிற்சி புத்தங்கள் ஆகியனவற்றை 8ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் வகுப்பறையிலேயே வைத்துச் செல்லலாம். கணினி, நல்லொழுக்கம், பொது அறிவியல், சுகாதாரம், உடற்பயிற்சி, விளையாட்டு, கலை சார்ந்த பாடப் புத்தகங்களை 8ஆம் வகுப்பு வரையிலான மாணவர்கள் பாடசாகளுக்கு கொண்டுவரத் தேவையில்லை என்றும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கோவை

## ‘பிராங்க் வீடியோ’வில் அச்சுறுத்தினால் சிக்கல்

‘பிராங்க் வீடியோ’ தயாரிப்பு என்ற பெயரில் மக்களை அச்சுறுத்தினால், சம்பந்தப்பட்டவர்கள் மீது வழக்குப் பதிந்து நடவடிக்கை எடுக்கப்படுமென எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

“பொதுமக்கள் நடமாட்டம் உள்ள பூங்கா, நடைபயிற்சி மைதானம், பள்ளி வளாகம் போன்ற பல பகுதிகளில் தனிநபர்கள் சிலர் பொதுமக்களிடம் குறும்புத்தனமான செயல்களில் ஈடுபட்டு அவற்றை வீடியோக்களாக எடுத்து, ‘பிராங்க் வீடியோஸ்’ என்ற பெயரில் தங்களது ‘யூடியூப் சேனலில்’ வெளியிடுவது சமீபகாலமாக அதிகரித்துள்ளது.

‘பிராங்க் வீடியோ’ என்ற பெயரில் வீடியோ எடுக்கும் பலர், அதை தொழில்முறையாகச் செய்து ‘யூடியூப் சேனலில்’ வெளியிட்டு



வருவாய் ஈட்டுகின்றனர். இவ்வாறு ‘பிராங்க் வீடியோ’ எடுப்பவர்களின் செயற்படுகள், அமைதியான சூழலை விரும்பி, பூங்காக்களை நாடி வருபவர்கள், நடை பயிற்சிக்காக மைதானங்களுக்கு வருபவர்கள், பாடசாலை, கல்லூரி, வணிக வளாகங்களுக்குச் செல்பவர்கள் மீது, மிகுந்த தாக்கத்தையும் திடீர் பரபரப்பையும் ஏற்படுத்துகிறது என்றும் கோவை மாநகர காவல் ஆணையர் பாலகிருஷ்ணன் வெளியிட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புதுடெல்லி

## கழலைக்கு தடுப்பூசி



கால்நடைகளை தாக்கும் தோல் கழலை நோயை கட்டுப்படுத்த உள்நாட்டில் தயாரிக்கப்பட்ட தடுப்பூசி விரைவில் அறிமுகம் செய்யப்படும் என்று இந்திய வேளாண் ஆராய்ச்சி கழகம் (ஐசிஏஆர்) தெரிவித்துள்ளது.

2019ஆம் ஆண்டு ஓகஸ்டில் ஒடிசாவில் கால்நடைகளுக்கு தோல் கழலை நோய் பரவுவது முதல்முறையாக கண்டறியப்பட்டது. கடந்த சில மாதங்களாக வடமாநிலங்களில் கால்நடைகளிடையே இந்த நோய் அதிவேகமாக பரவி வருகிறது.

தோல் கழலை நோய் பசுக்களை அதிகம் பாதிக்கிறது. இதன்காரணமாக குஜராத், ராஜஸ்தான் உள்ளிட்ட மாநிலங்களில் சுமார் 30 சதவீதம் அளவுக்கு பால் உற்பத்தி குறைந்துள்ளது. தயிர், நெய் உற்பத்தி 10 சதவீதம் குறைந்திருக்கிறது. இதேநிலை நீடித்தால் அடுத்த சில மாதங்களில் பால் பற்றாக்குறை மிகப்பெரிய அளவில் எதிரொலிக்கும் என்று நிபுணர்கள் எச்சரித்துள்ளனர்.

சென்னை

பொதுக்குழு செல்லுமென தீர்ப்பு

## எதிர்த்து இன்று மேன்முறையீடு

பொதுக்குழு செல்லும் என்ற தீர்ப்பை எதிர்த்து, உச்ச நீதிமன்றத்தில் இன்று (05) ஓ.பன்னீர் செல்வம் மேல்முறையீடு செய்யவிருக்கின்றார். அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க) பொதுக்குழு தொடர்பான வழக்கில் எடப்பாடி பழனிசாமி தரப்பில் சென்னை உச்ச மேல்முறையீடு மனு தாக்கல் செய்யப்பட்டது.

இந்த வழக்கின் தீர்ப்பு சனிக்கிழமை (03) கூறப்பட்டது. அதில் ஜூலை 11ஆம் திகதி நடந்த அ.தி.மு.க பொதுக்குழு செல்லும் என்றும், எடப்பாடி பழனிசாமி இடைக்கால பொதுச்செயலாளராக தொடரலாம் என்றும் கூறப்பட்டது.

உச்சநீதிமன்ற தீர்ப்பு வெளியான நேரத்தில் ஓ.பன்னீர்செல்வம் தேனி மாவட்டம் பெரியகுளத்தில் உள்ள தனது வீட்டில் இருந்தார். அவரிடம், இந்தத் தீர்ப்பு குறித்து நிருபர்கள் கேட்டனர். அதற்கு அவர், “ உச்ச நீதிமன்றம், இன்று (சனிக்கிழமை) வழங்கிய இந்தத் தீர்ப்புக்கு, புதுடெல்லி உச்ச நீதிமன்றத்தில் அ.தி.மு.க சார்பில் மேல்முறையீடு செய்யப்படும்” என்றார். இந்நிலையில், கட்சியின் ஒருங்கிணைப்பாளர், இணை ஒருங்கிணைப்பாளர் பதவிகள் காலாவதி ஆகாமல் பொதுக்குழுவை கூட்டியது எப்படி செல்லும் என்று நீதிமன்றத்தில் முறையிடவும் ஓ.பன்னீர் செல்வம் தரப்பு திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஜேர்மனி

# பணவீக்கத்தால் தள்ளாடும் ஜேர்மனி

கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு ஜேர்மனியில் பணவீக்கம் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ரஷ்யா-உக்ரேன் இடையே இடம்பெற்று வரும் போர் காரணமாக, சர்வதேச நாடுகள் ரஷ்யா மீது வரலாறு காணாத பொருளாதாரத் தடைகளை விதித்தன.

இப்பொருளாதார தடைகள் காரணமாக, ரஷ்யாவிடம் இருந்து எரிபொருள் இறக்குமதியை நம்பியிருந்த நாடுகள் பெரிதும் பாதிக்கப்பட்டன.


இதனால், சர்வதேச சந்தையில் கச்சா எண்ணெயின் விலை அதிகரித்தது. இதன் விளைவாக, பல்வேறு ஐரோப்பிய நாடுகளில் எரிபொருள், எண்ணெய், சமையல் எரிவாயு ஆகியவற்றின் விலை கடுமையாக உயரத் தொடங்கியது.

மேலும் பிரித்தானியா, பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட நாடுகளில் நுகர்வு பொருட்களின் விலை அதிகரித்ததால், பணவீக்கம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது.

அந்தவகையில், ஜேர்மனியில் மே மாதம் 8.7% ஆகவும், ஜூலை மாதத்தில் 8.5% ஆகவும் இருந்த பணவீக்கம், ஒகஸ்ட் மாதத்தில் 8.8% ஆக அதிகரித்துள்ளது. இது ஜேர்மனியில் கடந்த 50 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு அதிக அளவிலான பணவீக்கம் என்று கூறப்படுகிறது. இதனால் ஐரோப்பிய மத்திய வங்கியின் வட்டி விகிதம் அதிகரிக்கக் கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும் பணவீக்கத்தை கட்டுப்படுத்த போதுமான நடவடிக்கைகளை மேற்கொள்ளாவிட்டால், 2022 இறுதிக்குள் ஜேர்மனியில் பணவீக்கத்தின் சதவீதம் இரட்டை இலக்க எண் வரை அதிகரிக்கும் என பொருளாதார நிபுணர்கள் எச்சரிக்கின்றனர்.

கனடா



## பரசூட்டால் பறிபோன பிரபலத்தின் உயிர்

கனடாவின் டொரண்டோ பகுதியை சேர்ந்தவர் 21 வயதான தன்யா பர்டஷி. கல்லூரி மாணவியான இவர், 2017ஆம் ஆண்டு நடந்த 'மிஸ் டீன் கனடா' அழகி போட்டியில் பங்கேற்று இறுதி சுற்று வரை சென்றுள்ளார்.

அத்துடன் 'டிக்டொக்'கில் அவரை ஒரு லட்சத்திற்கும் அதிகமானோர் பின் தொடர்கின்றனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், ஸ்கை டைவிங்கில் மிகவும் ஆர்வம் கொண்ட இவர், நேற்று முன்தினம் (03) சுமார் 4,000 அடி உயரத்தில் இருந்து ஸ்கை டைவிங் செய்துள்ளார்.

இதன்போது பரசூட்டைத் தாமதமாக அவர் திறந்துள்ளதால் பாரசூட் முழுமையாக திறந்து வேலை செய்வதற்குள் அவர் தரையில் வேகமாக விழுந்துள்ளார்.

இதையடுத்து, தன்யாவை மீட்ட மீட்புக்குழுவினர் அவரை மருத்துவமனைக்கு கொண்டு சென்ற நிலையில், அவரைப் பரிசோதித்த வைத்தியர்கள் அவர் ஏற்கெனவே உயிரிழந்துவிட்டதாக அறிவித்துள்ளனர்.

அமெரிக்கா

## 33 வயதில் பாட்டியான பெண்?

33 வயதே ஆன பெண் ஒருவர், பாட்டியாக மாறியுள்ள சம்பவம் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.





அமெரிக்காவின் மிசூரி மாநிலத்தின் கன்சாஸ் என்னும் பகுதியை சேர்ந்தவர் ரேச்சல்.

33 வயதான ரேச்சல், 48 வயதான ஆடம் ஸ்மித் என்பவரை திருமணம் செய்துள்ளார். ஆடமிற்கு இது இரண்டாவது திருமணம் எனவும், அவரின் முதல் மனைவி மூலம் செரிடன் என்ற ஒரு மகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.

தற்போது 25 வயதான செரிடன், 2021 ஆம் ஆண்டு முதல் குழந்தையையும் கடந்த சில மாதங்களுக்கு முன்னர் இரண்டாவது குழந்தையையும் பெற்றெடுத்துள்ளார்.

இதன் காரணமாக ரேச்சல் 33 வயதிலேயே தனது வளர்ப்பு மகளின் குழந்தைகளுக்கு பாட்டியாக மாறி உள்ளார்.

இந்நிலையில் இது குறித்துக் கருத்துத் தெரிவித்த ரேச்சல், "இவ்வளவு இளமையாக இருக்கும் போதே, பாட்டியாக மாறுவேன் என நான் ஒரு போதும் நினைக்கவில்லை. ஆரம்பத்தில் இதனை அறிந்து கொண்டதும் அதிகம் அதிர்ச்சி அடைந்தேன். மேலும் என்னுடைய வளர்ப்பு மகளான ஷெரிடனுடன் என்னை சேர்த்து பார்க்கும் பலரும் நங்கள் சகோதரிகள் என்றே நினைக்கின்றனர்.

நானும் ஆடமும் தற்போது குழந்தைகள் பெற்றுக் கொள்ள வேண்டாம் என முடிவு எடுத்துள்ளோம். அப்படி இருக்கும் போதே இரண்டு குழந்தைகளுக்கு பாட்டியாக மாறி உள்ளோம். இது மிகவும் வித்தியாசமான ஓர் அனுபவமாக உள்ளது" என்றார்.

மெக்சிகோ



### கால்பந்துப் போட்டியில் துப்பாக்கிச்சூடு:

## மேயர் உட்பட 4 பேர் உயிரிழப்பு

மெக்சிகோவின் யேகாபிக்ஸ்ட்லா நகரில் நடைபெற்ற கால்பந்துப் போட்டியில் மர்ம நபர்கள் நடத்திய துப்பாகிச் சூட்டில், அந்நகரின் முன்னாள் மேயர் ரெபுஜியோ அமரோ லூனா உட்பட நால்வர் உயிரிழந்துள்ளார்கள்.

சம்பவ தினத்தன்று மைதானத்திற்கு திடீரென வந்த மர்ம நபர்கள், கால்பந்து போட்டியைப் பார்த்து கொண்டிருந்தவர்களை குறிவைத்து, கண்மூடித்தனமாக துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளனர்.

இதனை சற்றும் எதிர்பாராத மக்கள், உயிர் பயத்தில் நாலாபுறமும் சிதறி ஓடியதாகவும், இத்தாக்குதலில் 10 பேருக்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் இது குறித்த மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

அமெரிக்கா



### 16 குழந்தைகளைப் பெற்றெடுத்த தம்பதி

## குழந்தைகளுக்குள் இப்படியோர் ஒற்றுமையா?

அமெரிக்காவின் நோர்த் கரோலினா பகுதியைச் சேர்ந்தவர் கார்லொஸ். இவரது மனைவியின் பெயர் பெட்டி ஹெர்நாண்டஸ். இவருக்கு தற்போது 40 வயதாகும் நிலையில், இத் தம்பதியர் இதுவரை மொத்தம் 16 குழந்தைகளை பெற்றெடுத்துள்ளனர்.

இக்குழந்தைகளில், 6 ஆண் குழந்தைகளும், 10 பெண் குழந்தைகளும் உள்ளனர். இதில், 3 இரட்டை குழந்தைகளும் அடங்கும்.

அது மட்டுமில்லாமல், இந்த 16 குழந்தைகளின் பெயர்களிலும் ஒரு சிறப்பம்சம் உள்ளது. அதாவது, அவர்களின் தந்தையான கார்லொஸ் பெயரில் வரும் முதல் எழுத்தான 'C' வைத்து தான் அனைத்து குழந்தைகள் பெயரும் ஆரம்பமாகிறது.

இந்நிலையில், தனது திருமண வாழ்வில் 14 ஆண்டுகள் கர்ப்பமாக இருந்துள்ள பெட்டி, தற்போது மீண்டும் கர்ப்பம் அடைந்துள்ளார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் 20 குழந்தைகள் கிடைப்பது வரை குழந்தை பெற்றுக் கொள்வதை நிறுத்தும் முடிவு இருவரும் எடுக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

அதுமட்டுமில்லாது, தமது வீட்டில் மொத்தமாக 5 படுக்கை அறைகள் உள்ளன எனவும் அதில் பல அடுக்கு படுக்கைகள் உள்ளன எனவும், ஒரு வாரத்திற்கு தங்களின் குழந்தைகளை பராமரித்து கொள்ள இலங்கை மதிப்பில் சுமார் 3,25,000 ரூபாய் வரை அவர்கள் செலவழித்து வருவதாகவும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### ஆசியக் கிண்ணம்

# ஆப்கானிஸ்தானை வீழ்த்திய இலங்கை

ஐக்கிய அரபு அமீரகத்தின் ஷார்ஜாவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஆப்கானிஸ்தானுடனான சுப்பர் 4 சுற்றுப் போட்டியில் இலங்கை வென்றது.



இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கையணியின் தலைவர் தசுன் ஷானக, தமதணி முதலில் களத்தடுப்பிலீடுபடும் என அறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான், ரஹ்மனுல்லாஹ் குர்பாஸின் 84 (45), இப்ராஹிம் ஸட்ரானின் 40 (38), நஜிபுல்லா ஸட்ரானின் 17 (10), ரஷீட் கானின் 09 (07) ஓட்டங்களோடு 20 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்து 175 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. பந்துவீச்சில், டில்ஷான் மதுஷங்க 2/37 [4], மகேஷ் தீக்ஷன 1/29 [4], அசித பெர்ணாண்டோ 1/34 [4], வனிடு ஹஸரங்க 0/23 [4] என்ற பெறுதிகளைக் கொண்டிருந்தனர்.

பதிலுக்கு 176 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய இலங்கை, குசல் மெண்டிஸ், பதும் நிஸங்க மூலம் வேகமான ஆரம்பத்தைப் பெற்ற நிலையில், 36 (19) ஓட்டங்களுடன் நவீன்-உல்-ஹக்கிடம் மெண்டிஸ் வீழ்ந்தார். சிறிது நேரத்தில் 35 (28) ஓட்டங்களுடம் முஜீப் உர் ரஹ்மானிடம் நிஸங்கவும், குறிப்பிட்ட இடைவெளிகளில் சரித் அஸலங்க, ஷானக ஆகியோர் அணித்தலைவர் மொஹமட் நபி, முஜீப்பிடம் வீழ்ந்தனர். பின்னர் வெற்றியிலக்கை நோக்கி நகர்த்திச் சென்ற தனுஷ்க குணதிலக 33 (20) ஓட்டங்களுடன் ரஷீட் கானிடமும், பானுக ராஜபக்‌ஷ 31 (14) ஓட்டங்களுடன் நவீனிடம் வீழ்ந்தபோதும், ஹஸரங்கவின் ஆட்டமிழக்காத 16 (09), சாமிக கருணாரத்னவின் ஆட்டமிழக்காத 05 (02) ஓட்டங்களுடன் 19.1 ஓவர்களில் 6 விக்கெட்டுகளை இழந்த நிலையில் இலங்கை வென்றது.



### இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## சமநிலையில் சிற்றி வில்லா போட்டி

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், அஸ்டன் வில்லாவின் மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற அவ்வணிக்கும், நடப்புச் சம்பியன்களான மன்செஸ்டர் சிற்றிக்குமிடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.


சிற்றி சார்பாகப் பெறப்பட்ட கோலை எர்லிங்க் பிறோட் ஹலான்ட் பெற்றதோடு, வில்லா சார்பாகப் பெறப்பட்ட கோலை லியோன் பெய்லி பெற்றிருந்தார்.

இதேவேளை, எவெர்ற்றனின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 0-0 என்ற கோல் கணக்கில் லிவர்பூல் சமப்படுத்தியிருந்தது.

### இத்தாலிய சீரி ஏ:

## இன்டர் மிலனை வென்ற ஏ.சி மிலன்

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், சான் சிரோவில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற இன்டர் மிலனுடனான போட்டியை நடப்புச் சம்பியன்களான ஏ.சி மிலன் வென்றது.



ஏ.சி மிலன் சார்பாக, றஃபேல் லியோ இரண்டு கோல்களையும், ஒலிவியர் ஜிரூட் ஒரு கோலையும் பெற்றனர். இன்டர் மிலன் சார்பாக, மார்செலோ பிறோஸோவிச், எடின் டெக்கோ ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

இதேவேளை, பியொரென்டினாவின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 1-1 என்ற கோல் கணக்கில் ஜுவென்டஸ் சமப்படுத்தியது. ஜுவென்டஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை அர்கடியுஸ் மிலிக் பெற்றத்கோடு, பியொரென்டீனா சார்பாகப் பெறப்பட்ட கோலை கிறிஸ்டியன் கெளமாவே பெற்றிருந்தார்.

இந்நிலையில், லேஸியோவின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியை 2-1 என்ற கோல் கணக்கில் நாப்போலி வென்றிருந்தது.




### நெஸ்டமோல்ட் சைக்கிள் சவால்: 23 வயதுக்கு உட்பட்டோர் பிரிவில்

## வென்ற ஷெனால் சாமோட் டி சில்வா

அண்மையில் நடைபெற்ற இவ்வாண்டுக்கான நெஸ்டமோல்ட் சைக்கிள் சவாலின் ஆண்களுக்கான 23 வயதுக்குட்பட்டோருக்கான பிரிவில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் ஷெனால் சாமோட் டி சில்வா வென்றார். 38 கிலோ மீற்றர் தூரம் கொண்ட இப்பந்தயத்தில், இலங்கை இராணுவத்தின் சாரங்க பெரேரா இரண்டாமிடத்தைப் பெற்றதோடு, மூன்றாமிடத்தையும் இராணுவத்தின் கே.டி. கொஸ்கொடகே பெற்றிருந்தார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் திங்கட்கிழமை, 05 செப்டெம்பர் 2022, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.